போஸ்டல் ரி. நெ. 237

குமரன் துணை.

# விவேகபாநு

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு—திருக்குறள்.

தொகுதி 6. } 1907ஆம் நவம்பர்மீ { பகுதி 11.

விஷயங்கள்.

தர்மபரிபாலனம்—பத்திராதிபர்.
சிந்தாமணிசரித்திரம்—பி. எஸ். சுப்பிரமணியஐயரவர்கள்.
இராஜநிந்தனைச்சட்டம்—பத்திராதிபர்.
சர்க்கரைகைத்தொழில்—ஷை
இந்தியாவில்ராஜத்ரோகசரித்திரம—சுதேசமித்திரன்.
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்.
புத்தகக்குறிப்பு—ஷை
திருவருணைமலைச்சிலேடை வெண்பா } மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள்.

சொந்தக்காரர்—மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

பத்திராதிபர் } எஸ். சாமிநாதையர்.
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மதுரை விவேகபாநு அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

வருஷசந்தா ரூபா 2] [பத்திரிகை 1-க்கு விலை அணா 5

# புதிய பத்திரிகைகள்.

சுதேசபாநு:—சென்னையில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளி லிதுவுமொன்று. ஆதிவாரந்தோறும் வெளியாவது. இதனாலேயே இது சுதேசாபிமானத்தால் நடத்தப்பட்டதென்று தெளிவாகும். இனிய தமிழ்நடையில் அரிய விஷயங்களை யெழுதப்பெறுகின்றன. வருஷ சந்தா ரூ 3 தான்.

நியாயாபிமானி:—காரைக்காலினின்று குருவாரந்தோறும் வெளிப்படும் சமாசாரப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ 3 தான். இதுவும் நல்ல பத்திரிகையே யென்று கூறலாம்.

வித்தியாபாஸ்கரன்:—சிலாங்கூரினின்று சனிவாரந்தோறும்வெளிப்படும் ஒரு சமாசாரப் பத்திரிகை. இப்பத்திரிகைக்குப் பல கனவான்கள் அபிமானிகளாக இருக்கிறார்கள். ஊக்கத்துடன் நடைபெறுவதாகவே தெரிகிறது. வருஷ சந்தா ரூ 3—8—0.

தஞ்சை சனநேசன்:—திருவாரூரில் சனிவாரந்தோறும் வெளிப்படும் ஒருசமாசாரப் பத்திரிகை. இப்போதுதான் புதிதாகத்தோன்றியது. வருஷ சந்தா ரூ 3.

நம் நாட்டுக்கு எத்தனை பத்திரிகைகள் தோன்றுமாயினும் அதிகமாகப் பத்திராதிபர்கள் தங்கள் கடமையைச் செவ்விது செலுத்த வேண்டும், ஜனங்களும் ஆதரிக்கவேண்டும். பத்திரிகைகளின் உதவியிருந்தாலன்றி நாம் முன்னுக்குவர முடியாதென்பது நிச்சயம். இதைத்தம் தமிழ்நாட்டார்மட்டுமே இன்னும் கவனிக்கிறார்களில்லை. இனியேனும் கவனித்து உதவிசெய்வார்களாக.

பத்திராதிபர்.

உ

குமரன் துணை.

# விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 6. } 1907ஆ நவம்பர். { பகுதி 11.

## தர்மபரிபாலனம்.

நம் நாட்டில் தொன்றுதொட்டு நாம் எல்லாவற்றினும் முதன்மையாய்க்கொண்டாடிவருவது சத்தியவிரதமே. உபநிடதத்தில் நமக்கு முதல் முதல் கூறப்பட்ட கட்டளையே "சத்தியம்வத" என்பது. அதற்குச் சார்பாகவே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் "பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்று திருவாய் மலர்ந்தருளினர். அடுத்தபடி முக்கியமாக நாம் கைக்கொண்ட விஷயம் தர்மமே. "தர்மஞ்சர" என்பது நமக்குப் பிறந்த அடுத்த கட்டளை. இதனைத்தழுவியே நம் மூதாட்டியும் காலத்திற்கேற்ப மாற்றி "அறஞ்செயவிரும்பு" என்று கூறினள். ஆகையால் ஏனைநாட்டாரினும் நாம் தருமத்தை மிகவும் மேலாக நெடுநாளா மதித்து வந்திருக்கிறோமென்பதிற் சிறிதுமையமில்லை. அவ்வித உயர்வான தர்மம் பலவிதப்படும். தமிழ் நாட்டார் தருமங்களையெல்லாம் ஒருவிதமாக வகுத்து முப்பத்திரண்டு எனக்கூறுவர். அவை ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு முதலியன. அவைகளில் அடங்காததருமங்கள் கிடையா. அந்நிய நாட்டார் பலவிதமாய் அறச்சாலை ஏற்படுத்தியிருப்பதும் நம் முப்பத்திரண்டு தருமங்களில் அடங்கும். ஆனால் நம் நாட்டில் அத்தருமங்கள் பழையகாலங்களில் பக்தி சிரத்தையுடன் நடந்து வந்த விதம்

தற்காலம் நடக்கவில்லை யென்பது யாவருமறிந்ததே. அவ்வித மாண்புள்ள தருமங்கள் முற்காலம் போலவே நன்கு நடந்தேறி வரும்வண்ணம் பார்த்து வருவது நம் கடமைகளில் முதன்மையானது என்பதை நாம்சிறிதும் மறக்கவொண்ணாது. தருமகாரியத்தில் மனம் செல்வது அரிதினும் அரிது. மனத்தை எத்துணையோவிதம் கட்டுப் படுத்தி அதன் குரக்குக் குணத்தை அடக்கி ஒருநிலைக்குக் கொணர் வது மிகவும் கஷ்டமான விஷயமே. அவ்வாறு வெகு பிரயாசையின் மேல் செய்துவந்து மேற்பட்ட தர்மங்கள் சீர்குலைந்துபோகின்றனவெ ன்றால் அதினினும் பரிதபிக்கத்தக்க விஷயம்யாதுளது. புதிதாகத்தர் மங்கள் ஏற்படுவதினும் பழைய தர்மங்களைக் காப்பாற்றுவதே மேல். சிலர் இதனையறியாது பழைய தர்மங்களை அடியோடே தொலைத்து அவ்விடத்திற் புதுத்தர்மங்களை ஏற்படுத்த முயல்கின்றார்கள். அவ் வாறு செய்வது தேசத்துரோகமாகும். இதனால் நம் பழைய வழி களையே குருட்டுத்தனமாய் அநுசரித்து நடக்கவேண்டுமென்று கூற வந்தேமல்லேம். காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவண்ணம் அவைகளை மாற்றிக்கொள்ளல் நலமே. இருந்தாலும் பழைய தர் மங்களின் வழிகளை முற்றிலும் நீக்குவதற்குப் பிறிது நன்கு ஆராய்ந் தறிந்து பழையன குற்றமென்று கண்டால் மாத்திரமே அவைகளை நீக்கல் தகுதியாம். அவ்வாறின்றி மனம்போன போக்கெல்லாம் போதல் சரியாகமாட்டாது.

தர்மங்களைச் செய்வதில் நம் நாட்டார் மத சம்பந்தமான தர்மங் களையே மேலென நினைத்து வந்திருக்கிறார்கள். அநேகமாய்ப் பல நாட்டாருடைய கொள்கையும் இதுவே என்றாலும் நம் நாட்டிலே ஜனங்கள் இதனை முதன்மையாகக் கைக்கொண்டார்கள். இது நல்லதுதான், ஆனால் அவைகளுக்கு அநுகுணமானவற்றையும் சீர் தூக்கிப் பார்த்துச்செய்தல் நலம். இகலோக பரலோகசாதனங்களில் முதன்மையானது கல்வி யென்பதை எவரும் மறுக்கவொண்ணாது. முற்காலத்தில் இதுவிஷயமாக நம் நாட்டார் கண்ணுங்கருத்துமாயி ருந்து வந்தனர். தற்காலம் தேசக்ஷேமத்தையும் ஆத்ம லாபத்தை யும் கைசோரவிட்டு புகழுக்கும் பேருக்குமே பலர் டாம்பீகமாகப் பல தர்மங்களை நடத்தத் தலைப்படுகிறார்கள், சிலர் போட்டிக்காக

தருமத்தில் பிரவேசிக்கின்றனர். நம் முன்னோர்களில் பலரும் தருமஞ் செய்யுங்கால் ஈசுவரார்ப்பணமாகவே செய்வது வழக்கம். அதனால் புகழும் பேருமுண்டாயிற்று. நாம் நினைத்துச் செய்யாவிடினும் தர்மமாகவே புகழும் பெருமையும் நம் தலைவாயிடத்து நாட்டப்படும். இக்கலிகாலத்தில் தருமத்தை ஈசுவரார்ப்பணமாகச் செய்தாலும், பேருக்கும் புகழுக்குமென்று செய்தாலும், போட்டிபோட்டுக்கொண்டு அகங்காரத்தின்மேற் செய்தாலும் தர்மம் தர்மமே. ஈசுவரார்ப்பணமாகச்செய்தல் உத்தம தர்மமானால் வேறுவிதமாகச் செய்தல் மத்திமம் அதமம் ஆகும். ஆனால் அவை தர்மம் என்ற வகுப்பினின்று விலக்கப்படா. அவைகள் எவ்வாறாகவாவது அதிகரித்தல் நாட்டின் க்ஷேமத்துக்கு அநுகூலமாகும். நம்நாடு வரவர ஏழைமைத்தன்மையை அடைந்து வருகின்றதென்பது பல புத்திமான்களின் கொள்கை. அதனால்தர்மங்களை விருத்தியாக்கி அவ்வெளிமையைத் தொலைத்தல் நம் முதற்கடமையாகும். அவற்றைஅபிவிருத்திசெய்வதிலும் காலதேச வர்த்தமானத்துக்குத் தக்கவண்ணம் தக்க முறைகளை அநுசரித்தல் நலமாகும். நம் நாட்டு க்ஷேமமே நமக்கு முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். அந்நிய தேசங்களின் செல்வப்பெருக்கையும் செழிப்பையும் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு வீண்பேச்சுக்கள் பேசுவதிற் பயனில்லை. அவைகளை அபிவிருத்திபண்ண வேண்டுமானால் புராதனமாக ஏற்பட்டிருக்குந் தருமங்களை ஆய்ந்தறிந்து அவைகளில் சீர்திருத்தம் செய்யவேண்டியவைகளைமட்டும் சீர்செய்து மற்றவற்றைப் பழைய ஸ்திதியிலே நடக்கும் வண்ணம் விட்டுவிடுதல் சௌகரியமாக இருக்கும். அவ்வாறின்றி அந்நிய நாட்டாரின் கொள்கைகளை அநுசரித்து கைகண்ட நம் புராதன வழிகளை மாற்றல் கூடாது.

அன்னதானம், வித்தியாதானம், தேவாலயம் முதலிய பல தர்மங்களுக்கு நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சொத்துக்கள் ஏராளமாயிருந்துவருகின்றன. அவைகள் சரிவர நடக்கும்பக்ஷத்தில் நாட்டிற்கும் பலவித க்ஷேமலாபங்கள் உண்டாயிருக்கலாம். அவ்வாறின்றி முதல்முதல் அத்தருமங்கள் ஏற்பட்டதின் நோக்கங்கள் முற்றிலும் மாறிச்சீர்குலைந்து கிடக்கின்றன. தேவஸ்தானத்தார் தாங்

கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் சச்சரவு செய்து சொத்துக்களை வியாச்சியத்திலும் வம்பு வழக்குக்களிலும் வீண் விரயம் செய்துவருகிறார்கள். சிற்சில தேவஸ்தானங்களில் கமிட்டிகளென்றும், தர்மகர்த்தாக்களென்றும், பஞ்சாயத்தாரென்றும் பெயர் வைத்துக்கொண்டிருக்கிற பழம்பெருச்சாளிகள் அத்தர்ம சொத்துக்களையும் வரும்படிகளையும் விலாப்புடைக்கத்தின்று ஏப்பமிடுகின்றனர். சிலர் தாம் யாதொன்றும் வியாபிக்காவிடினும் பிறர் கொள்ளையடிப்பதைக்கண்கூடாகப்பார்த்தும் யாதொரு விஷயத்தையும் காதிற்போட்டுக்கொள்ளாமல் பற்றற்றவர்போல நடித்து வருகிறார்கள். அவர்களும் கொள்ளைக்காரர்களில் ஒருவரேயாவர். சிலர் அதிகாரப் பிரியத்தையே மேலாக மதித்துத் தர்மபரிபாலனத்தை முற்றிலும் மறந்த கண்மூடிகளாயிருக்கின்றனர். சிலர் எல்லாவற்றையும் நன்குணர்ந்திருந்தாலும் தர்மவழியிலேயே நடக்க முயற்சி செய்தாலும் கூடச்சேர்ந்தவர்களுடையதோஷங்களால் யாதொன்றும் செய்யமுடியாதவர்களாயிருந்து வருகின்றனர். இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் தலைப்படுவதென்றால் பயப்படவேண்டியிருக்கிறது. அவர்கள் விபரீதமாய்ப்போனால் என்ன செய்கிறது என்று நினைத்து தலையிடாமலிருக்கிறார்கள் போலும். ஆகையால் இவ்வநியாயங்களை நிறுத்தவேறெவராவது ஏற்படல் இன்றியமையாதது. நம் நாட்டுப்புத்திமான்கள் இதுவிஷயமாகப் பலவித முயற்சி செய்து பார்த்தும் பலிக்காமல் இனி நாமே சொந்தத்தில் பரிகாரந் தேடிக்கொள்வதே உத்தமம் எனத் தீர்மானித்துத்தக்க வண்ணம் "தர்ம ரக்ஷண சபை" என்ற பெயர் பூண்ட ஒரு மகா சபையை நம் சென்னை ராஜதானிக்கென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஆனரெபில் வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், பி. ஆர். சுந்தரமையர் அவர்கள் மதுரை பி. நாராயண ஐயர் அவர்கள், எல். ஏ. கோவிந்த ராகவையர் அவர்கள், முதலிய கனவான்கள் சேர்ந்து சில மாதங்களாக உழைத்துவருகிறதை நாம் எல்லோரும் அறிவோம். அன்னவர் முயற்சிகள் கைகூடும்பொருட்டு தர்மாத்துமாக்களாகிய எந்தஇந்துவும் தன்னாற் கூடியவரை புத்தியாலாவது,சரீரத்தினாலாவது, பொருளினாலாவது கைகொடுத்துத்தேசக்ஷேமத்தை அபிவிருத்தி செய்தல் மிக்க மேலான தர்மம் ஆகும். அச்சபையார் தக்கவர்களை ஒவ்

ஊராய் அனுப்பி இது விஷயமாக முதல் முதல் சங்கதிகளையறிந்து வர ஏற்பாடு செய்தல் வேண்டும்.

எழுத்து மூலமாக எவ்வித ஏற்பாடு செய்யினும் நம் ஜனங்கள் கவனியார்கள். ஏதேனும சிறிது கவனித்தாலும் சிரத்தை பாராட்டிக்கடமைமைச செய்யார். சிலர் இவ்வித ஏற்பாடுகளையே பெருங் கேடாக நினைத்து இதற்கு விரோதமாகவும் வேலை செய்வார்கள். ஆகையால் தக்கவர் சிலரைத் தெரிந்தெடுத்து சகலவிதமான தர்மங்களைப்பற்றியும் சவிஸ்தாரமாக அறிந்துகொள்ளவேண்டும். கவர்ன்மெண்டார் இதுவிஷயமாகத் தங்களாலியன்ற உதவி செய்வார்கள் என்பது திண்ணம். விஷயங்களை ஆராய்ந்தறிய அனுபபப்பபட்டவர்கள் சுயநயத்திலும் தேசக்ஷேமததை அதிகமாகக் கருதினவர்களாகவும், சத்தியவந்தர்களாகவும், தேசக்ஷேமத்தின்பொருட்டுப் பாடுபடபபிரியமுடையவர்களாயும், நயமொழியுடையவர்களாகவும், சுலபமாகச் சிநேகிககததக்க குணமுடையவர்களாகவும், கூடிய வரை பிரஞ்ஞையுள்ளவர்களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் இருக்தல்வேண்டும். அவர்கள் தற்காலம தேச க்ஷேமத்தைக்கருதி பிரயாணச்செலவைமட்டுமே வாங்கிக்கொண்டு சிரமபபடுகிறவாகளாகவுமிருக்ததல்வேண்டும. ஆங்கிலம் கற்றவாகளாயிருத்தல் நலம். எல்லாவற்றிற்கு மேலாக தெய்வபகதி, தேசபக்தியுடையவர்களாயுமிருத்தல்நிகநலம். தற்காலம் இன்னவர்களை உபாத்தியாயர்களிலிருந்தும், வக்கீல்களிலிருந்தும், கவர்ன்மெண்டு பெனஷனர்களிலிருநதும் உத்தியோகஸ்தர்களிலிருந்தும் தெரிந்தெடுக்கலாம். அவர்கள் தங்கள் விடுமுறை நாட்களின் ஒரு சிறிது பாகத்தை இத்தர்ம விஷயமாகச் செலவிடப்பின் வாங்கார்கள். தக்கவண்ணம் முயற்சி செய்யும்பக்ஷத்தில் இதுவிஷயத்தில் சிறிதும்கஷ்டம் ஏற்படாது. அவைகளுக்காக முக்கியமான பட்டணங்களில் சங்கங்களும் கிளைச்சங்கங்களும் ஏற்படுத்தி அவ்வச் சங்கங்கள் செய்த வேலைகளை அப்போதைக்கப்போது பிரசுரப்படுத்தி வேலைசெய்துவந்தால் இரண்டொரு வருஷத்தில் தர்மபரிபாலன விஷயமாகப்பல விஷயங்களை அறிநதுகொள்ளலாம். நேரில தக்கவர்கள் போய் அவ்வவ்வூரிலுள்ள தக்க மனுஷர்களைக் கொண்டு விஷயங்களை அறிய முயற்சி செய்தால் சுலபமாக முடித்து

விடலாம். பணச்செலவு அதிகமாக வேண்டுவதில்லை. பின்னர் சீர்குலைந்த தர்மங்களைக் கண்டுணர்ந்து தக்க பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம். முயற்சியே திருவினையாக்கவேண்டும். பலமான ஏற்பாடுகளைச் சோம்பலின்றிச்செய்து தக்கவர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும்பக்ஷத்தில் மிக்க சுலபமாகவே நினைத்த காரியம் கைகூடும். அதே வேலையாக உழைக்கும்வண்ணம் மூன்று நான்கு ஜில்லாக்களுக்காவது தக்கவர் ஒருவரைத்தகுந்தசம்பளத்தில் ஏற்படுத்தல் நலம். அவ்வாறில்லாவிடில் எடுத்த காரியம் எளிதில் முடிவது அரிது. நிலையை விட்டுக் கிளப்பமட்டும் ஏற்பாடு செய்தால் பின் பலர்கூடி ரதத்தை இழுத்துக் கொணர்வார்கள். முதலில்மட்டும் தக்கவண்ணம் முயற்சி செய்தல்வேண்டும். அதற்கென்று ஏற்படுகின்ற சொற்பச் செலவை ஒரு பொருட்டாக நினைத்தல் கூடாது. தர்மம் செய்யச்சக்தியுடையவர்கள் இவ்வித தர்மத்தைக் கட்டிக்கொள்வதே மேலான தர்மமாகும். ஆகையால் 'தர்ம ரக்ஷணத்துக்கென்று ஏற்பட்ட சபையார் இது விஷயத்தை நீள நினைந்து தக்க ஏற்பாடுகளைக் காலதாமதமின்றிச் செய்வார்களாக. தேவாலயங்களைப்போல் மடாலயங்களும் ஏராளமான தர்ம சொத்துக்களை வகித்து வருகின்றன ஆதலால் அவைகளும் சீர் அடையும். அவை சீரடையின் நாட்டுக்கல்வி தழைத்தோங்குவதிற்றடையில்லை. அறிவைப்பரவச்செய்து நாட்டின் அந்தகாரத்தை ஓட்டித்தர்மத்தை நிலைநாட்டிச் சர்வ ஜனங்களும் சகல சுகங்களையும் பெற்று நீடூழி வாழும் வண்ணம் எல்லாம் வல்ல கடவுள் கிருபை புரிவாராக.

பத்திராதிபர்.

உ

# சிந்தாமணிசரித்திரம்.

(230-ம் பக்கத்தொடர்ச்சி.)

## 7-ம் அத்தியாயம்.

மேலே கூறிய நகரத்தின்கண் வணிகர்களின் வீடுகள் நிறைந்த மாடவீதியில் திருவனந்தபுரமிருந்து வந்திருக்கும் மிக்க தனவானாகிய ஒரு செட்டியார் ஒரு மாளிகையைவிடுதியாகக்கொண்டு சிலநாட்களாக வசித்து வந்தனர். அவருக்கு ஏதோ உடலில் ஒரு பிணி நேரிட்டு அப்பிணியை யகற்றும் முறையறிந்த பல வைத்தியர்களைத் தருவித்து அவர்களிடமிருந்து மருந்துவாங்கி யருந்தவேண்டி இங்கு வசித்துக்கொண்டிருந்தார். ஓரிரவில் பத்துநாழிகையிருக்கும். வேளாளரொருவர் வைத்தியத்தொழிலில் கைதேர்ந்தவரென்க் கீர்த்தியடைந்தோமென்கிற செருக்குடன் அம்மாளிகைக்குட் புகுந்தனர். அவர் அங்கு வரவும் அவர் தோளின்மேல் புனைந்திருக்கும் ஒருபட்டுத்துண்டினின்றெழுந்து பரவிய நூர்வாசனையானது எல்லாப்பிணிகளும் அவரிடம் கிரம்பியிருக்கின்றனவென விளம்பலாயிற்று. அவ்விடத்தில் அப்பிணியாளியின் பக்கத்தில் அமர்ந்திருந்த சில அச்சிமங்கையர்கள் அவர்களுடைய பாஷையில் அவ்வைத்தியனை உபசரித்து அந்நோயாளியின் நாடியை ஆராய்ந்து அவர் பிணிக்குத்தக்க சிகிச்சை செய்யவேண்டுமென அவரைப் பிரார்த்தித்தனர். அங்கேயிருந்த பாலப்பிராயமுள்ள அந்தணரொருவர் அந்த வைத்தியரைப் பார்த்தவுடன் மிக்க மனவருத்தமுற்று

"ஐயோ! இதென்ன கிரகசாரம். பணமுள்ளவனுக்கு நோய்வரின் சடுதியிற் பிணமாவதன்றி அவனுக்கு வேறுகதி யமையாதென்பது போலவிருக்கின்றதே. நோய் அமர்ந்து கொல்லும். வைத்தியன் துணிந்து கொல்வன் என்பது நமது அநுபவத்தினால் நன்குவிளங்குகின்றது. அந்த டாக்டர் ரூபா ஆயிரத்தைக் கைப்பற்றிக்கொண்டு பனிக்கட்டியைத் தலையில் வைத்துக்கட்டி இவரை யமபுரத்துக்குப் பாதிவழியிற் கொண்டுபோய் பிறகு அவரைக்கரைசேர்ப்பதற்கு வேறு மருந்தில்லாமையால் இடைவழியில் கைவிட்டுச் சென்றனர்

போலும், மற்றொரு துரைமகன் மானிடர்களின் உடற்கூறு மிக நன்றாய் அறிந்தவராம். அவர் குறித்த காலத்துக்குள் நோயாளியின் வேலையை முடிப்பதில் தவறாத பான்மையுடையவராம். அவர் இந்தப் புண்யவானுடைய வயிற்றைக் கீறி முதலில உயிரையும் பின்னர் பிணியையும் அகற்ற முயன்றனர். இங்கேயிருக்கும் குரங்குகள் சளசளவென்று அவர்கள் பாஷையில் இரைச்சலிட்டு மிக்க வியாகுலத்துடன் அந்த மகாநுபாவனை அகற்றிவிட்டார்கள். இன்னும் சிலகாலம் நோயோடாயினும் செட்டியார் உயிர்தரித்திருப்பரென ஒருவாறு திண்ணங்கொண்டிருந்தோம். இந்த நிலைமையில் இவரை யார் இங் கேகூட்டிவந்தனர். எல்லாம் சிவன் செயல்" எனவாய்க்குள் முணுக்கிப் பேசிக்கொண்டு பின்னர் அந்த வைத்தியரை நோக்கி,

"பிள்ளையவர்களே ! வரவேண்டும்" எனச்சொல்லிச்செட்டியாருடைய பிணியின் வரலாறுகளை அவரிடம் புகன்றனர். உடனே அவ்வைத்தியர்தம் தோளின்மேலிருந்த பட்டை உதற வீரம், பூரம் கந்தகம், பாஷாணம் முதலிய சரக்குக்களின் பரிமளம் அவ்வில்லம் முழுமையும் நிறைந்து அங்கிருப்பவர்கள் சுவாசம் விட வொண்ணுத படி செய்தது. அவர் அப்பட்டை நோயாளியின் முன்கையில்விரித்துப் பார்த்துப் பிணியின் வரலாறு முழுமையையும் உள்ளங்கைக் கனிபோற் கண்டறிந்துவிட்டார். சற்றுநேரம் மிகவும் யோசிப்பவர்போல் மௌனமாயிருந்து பிறகு அவ்வந்தணரை நோக்கி"

"ஐயா! நன்றாய் ஆராய்ந்தேன் இவருக்கிருப்பது ஒரு வியாதி நான் சொல்வது சரிதானு? என் கைவசமிருப்பது யமகிங்கர ரசாயனம். அது கொங்கணசித்தர் குரங்கோட்டிச் சித்தருக்கு மொழிந்தருளிய முறைப்படி அமைக்கப்பட்டது. அம்மருந்தை ஒருமுறை யருந்திடில் அரையாப்பு, கிரந்தி, நாலாயிரத்து நானூற்று நாற்பத்தி நான்கு மேகம், ஐயாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தைந்து வாதம், ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்தேழு சிலேஷ்மம், உதாருலை, மூலரணம் முதலிய எல்லாப் பிணிகளையும் சடுதியில் அகற்றி நோயாளியை இனி எப்பிணியும் அணுகாத நிலைமையிற் சேர்த்துவிடும்" என்றார். இது கேட்டு அந்தணர்

"சிவ ! சிவ !! வேறு வியாதி வேண்டாம். இந்த ஜாப்தாவைக் கேட்டாலே பஞ்சப்பிராணனும் அநாயாசமாய் அடங்கிவிடும். இவர் நல்ல காரியத்துக்காக இங்கு வரவில்லை." என்று மெல்லப்புகன்று விட்டு "வைத்தியரே! இதையெல்லாம் சொல்லவேண்டாம். கேட்க ப்பயமாயிருக்கின்றது. இவருக்குத் தாங்கள் ஏதாவது ஔஷதம் கொடுத்து இவர் பிணியைப் பரிகரிக்க முடியுமானால் அதைச் செய்ய வேண்டு" மென்றார். அதைக்கேட்ட வைத்தியர் "தாங்கள் உரைத்தது மெய். இவருக்கு வாதத்தின்மேல் பித்தம்ஏறியபடியால் மேக க்கனல் மிகுதியாகிச் சிலேஷ்மமடங்கி நிற்கின்றது. அதை யொரு வாறு கிளப்பிவிட்டு வாதம் அழுந்தும்படி அவுஷதம் கொடுக்கவேண் டுமென்பது அகஸ்தியர் ஐந்நூற்றில் பல பாடல்களால் உரைத்திருக் கின்றனர். அப்பாடல்களிற் சிலவற்றை நீங்கள் கேட்கவேண்டும்" எனச்சொல்லி நோயாளியின் தலைமாட்டில் பரிகாரி அமுமிருன் என்ற வசனத்துக்கிணங்கப் பாடத்தொடங்கினன். இத்தருணத் தில் செட்டியாருக்குத் தலைவலி மிகுதியாய் மயக்கமும் மேலாயிற்று. அதைக்கவனியாமல் அவ்வைத்தியன்

கேளப்பா மூலச்சூடகற்றும் வண்ணம்
கிழமான வெருமையின் மூத்திரம் சேரொன்று
மாளப்பா பூனையின் மூத்திரஞ் சேரொன்று
வருபன்றி மூத்திரஞ்சேர் ஒன்றுசேர்த்துச்
சூளப்பா வருடமது நூறு சென்ற
தொல்வேம்பு வேரெடுத்துக் கஷாயஞ் செய்து
நாளப்பா ஆறதுதான் கொண்டாயாகில்
நலமற்ற மூலச்சூடகன்றவாறே.

என்றுபாடியவுடன் அவ்வந்தணர் சிரித்து

"ஒன்றும்குறைச்சலில்லை. அந்தப்பாட்டிலேயே "மாளப்பா" வென்று ஐயமற மொழிந்திருப்பதால் நோயாளிக்கு அப்பாட்டைத் தவிர வேறு கின்ன மந்திரம் வேண்டுவதில்லை". என்று சொன்னவு டன் வைத்தியருக்குக் கோபம் மேலாகி நீரொன்றுமறியீர். நான் பரம்பரையாக வைத்தியன். என் முன்னோர்கள் தஞ்சாவூர் அரண்

மனையில் வைத்தியஞ் செய்து அந்த ராஜா பரம்பரையை இன்னம் வாழவைத்திருக்கிறார்களென்பது நிதர்சனமாகத்தெரியுமே. எங்கள் பெருமை உங்களுக்குத்தெரியுமா? நீர் கேட்டதில்லையா?

விருத்தம்.

கைத்திறம் போதாதென்ற காலனை நோக்கியீசன்
சைத்தியம் முதலாமநோய்கள் தந்திட்டோம் சிலாகள்மாதர்
பைத்தியங்கொண்டேதானுய்ப் படுவர்பின் மிகுந்தபேரை
வைத்தியர் கொல்வர் நீபோய் வாழெனப்புகன்றிட்டாரே.

என்று பரமசிவன் கட்டளை யிட்டிருப்பதைக்கொண்டே வைத்தியர்கள் தேவர்களிலும் மேலானவர்களென்று எளிதில் அறியலாம். நாங்களில்லாவிடில் யமதேவனுக்குப பிழைப்புண்டோ? வைத்தியம் படிப்பினால் வரக்கூடியதன்றே. அநேக அநுபவத்தால்சம்பாதிக்கக் கூடிய வித்தை. எத்தனை ஜமீன்தார்களுககோ வைத்தியஞ் செய்து அவர்கள் உயிர்களை என் மருந்துப் பையில் அடைத்துவைத்திருக்கிறேனென்பதை நீர் அறிவீரா?

லேகியத்தை மேலென்றார் கபிலர் சாதி
லிங்கமதைக் கூறிட்டார் ஒட்டைச்சித்தர்
வாகுடனே கும்பமுனி பூரக்கட்டு
வானுலகஞ்சேர்க்குமென வழுத்தினார் முன்
சோகமறக் கைலேபுக வேண்டுவோர்க்குச்
சுண்ணமொன்றே கொங்கணரும் சொன்னார் கண்டாய்
சாகமனயில்லார்க்கு வைத்தியஞ் செய்யும்
சண்டாளர் நரகமதிற் றாள்வீழ்வாரே.

என அநாதிநாதரும், பகுளிநாதரும் சங்கையற மொழிந்திருக்கின்றார்கள். என்று சொல்லிவிட்டுக்கொஞ்சம் மிளகும் கள்ளிப்பாலும் கலந்தரைத்து முதலில் செட்டியார் கண்களுக்குக் கலிக்கம் போட்டு அவருடைய உடல் வலியை அறியவேண்டுமென்று புகன்று அவ்விரண்டு மருந்துகளையும் அரைப்பதற்காகத் தன்னுடைய மருந்துப் பையிலிருந்து கலுவம் ஒன்றை எடுத்துவைத்தார். இதைப்பார்த்

துக்கொண்டிருந்த அந்தணர் "அதைக்காட்டிலும் அக்கிநித்திராவகம் உங்களுக்குள் கைகண்டமருந்தாயிருக்குமே. அதையேன் சித்தர்கள் உரைக்கவில்லை" என்று வினவ வைத்தியர்

"நான் மேற்சொல்லிய கலிக்கம் பயனுறுவிடின் பின்னர் அக்கி த்திராவகத்தை அடுத்த முறையாகக் கைக்கொள்ளவேண்டியது. மேலும்,

மேகநீர் குட்டங்காசம் வெட்டை நோய் மூலச்சூடு
சோகைகண்வலி மயக்கம் சூலைநோய் குன்மகாந்தல்
நோகுமுள் மூலம் சன்னிகோயெனும் பிணிகட்கெல்லாம்
வாகுடன் கலிக்கமொன்றே வழுத்தினர் மதங்கநாதர். எனப்பாடும்

பொழுது அப்பாட்டுக்களைக்கேட்கக்கேட்கச்செட்டியாருக்குத் தலைவலி மேலாகி அதைப் பொறுக்க முடியாமல் அவர் ஐயோ அப்பாவென்று மிக்க கஷ்டப்படுகையில் அந்தணர் வைத்தியரை நோக்கி

"ஐய, பாடினது போதுமே. நோயாளி உங்கள் மருந்துக்குத் தப்பினாலும் உங்கள்பாட்டுகருக்குத் தப்பமுடியாதே. சிவ! சிவ!! சிவ!!! அந்தப் பாட்டொன்று போதாதா? கையைப்பிடித்து விரல்களைந்தையும் கூட்டி யிழுத்தொடித்துக் கொலைபண்ணும் பொழுது தாதுக்களெல்லாம் தன்னாலே மறைந்தழுந்திவிடாவா? இதற்கு மிஞ்சினால் உங்கள் கஷாயம் எண்ணெய், மெழுகு, சிந்தூரம், பஸ்மம் இவைகளிருக்கின்றன. வேலையை முடித்துவிட அவைகளிலொன்றேபோதும். பாவி உயிர் இத்தனைக்கும் அசையாவிட்டால் பத்தியமிருக்கிறது. வயிறு காயும்போது உயிர் எங்கே ஒளித்துக்கொண்டிருக்கும். இவைகளுக்கெல்லாம் தப்பினால் உங்கள்கையில்பிரம்மாஸ்திரம்போல் பாட்டுக்களும் இருக்கின்றன. யமதேவன் இங்குவராமலே உயிரைச் சடுதியில் அவனூர்க்கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் மகிமை அப்பாட்டுகளுக்கு இருக்கின்றது. என்று சொல்லிச் சிரித்துவிட்டு தங்கள் பேரென்னவென்று வைத்தியரைக்கேட்டார். அதற்கு வைத்தியர்

நீர் சிறுபிள்ளை ஆகையால் தாறுமாறாகப்பேசுகின்றீர். என் தாய் தகப்பனர் எனக்கு தர்ம ராஜனென்னப் பேரிட்டார்கள், நான் பிறந்த என் அம்மான் வீடு கூத்தனூரிலிருப்பதாலும் அவ்வூர் கிராமதேவ

தைக்குச் சித்திரபுத்திரனெனப்பெயராகையாலும் அந்தத்தெய்வத் தின் பெயரை எனக்கு வைத்து எல்லாரும் என்னைச் சித்திரம் பிள் ளையெனச் செல்வமாக அழைப்பார்கள். ஐயா! நமது மருந்துகளின் ஸ்வபாவத்தை நீர் அறியமாட்டீர் அவைகளின் மகிமையை சாஸ்திர மல்லவோ முறையிட்டுக்கூறுகின்றது.

சுக்கொருமண்டலமுண்டே சூலபாணி
சுட்டெரிதது முப்புரத்தைத் தொலைத்தான் சீறிச்
சர்க்கரையோர் மாதமுண்டே மார்க்கண்டேயன்
சாகாமல் வாழ்கின்றான் சதகுப்பைக்குப்
பக்குவம் செய்தே யருந்தியிடையமர்தர்
பலரோடும் வாழ்ந்திருந்தான் பார் முன் கண்ணன்
மிக்கவுயர் திப்பிலியை உணவாயுண்டு
வென்றிட்டான் சூரனை அவ்வேலன் தானே.

சாஸ்திரமெல்லாம் இவ்வாறு முறையிடும்போது இக்காலத்திலுள்ள வர்கள் பாலையும் கற்கண்டையும் கோதுமையையும் உண்டு நாசம டைகிறார்கள்.

பாலுண்டே கண்ணிழந்தான் திருதராஷ்டரன்
பாண்டு வெளுத்தான் கதலிப்பழத்தையுண்டே.
வலமதைத்தின்று குறளாகியூர்ந்தே
ஏங்கினன் கும்பமுனி இனிததைதேனை
நாலிரண்டுநாள் புசித்தோர்தலைபோய் அய்யோ
நான்முகனுனையனும் நாவைக்கட்டி
சீலமுடன் வேப்பெண்ணை யொன்றேயுண்டு
தேவரெல்லாம் மரணமுற்றுத் திகழ்கின்றாரே.

என்று சொல்லி மீசையை முறுக்கிக்கொண்டு அந்தணரைப்பார்த் தார். உடனே அந்தணர்

வைத்தியரே எங்களுக்கெல்லாம் என்னதெரியும். தெரியாமை யால் ஏதோமொழிந்தேன். அதைத்தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். இப்போது செட்டியார் தலைவலி மிகுதியால் வருந்தப்

படுகிறார். அதற்குத் தற்கால சாந்தியாக ஏதாவது ஓர் சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னவுடன் வைத்தியர்

நமக்கு எப்பொழுதும் சாஸ்திரந்தான் ஆதாரம். தலைவலிக்கு இடைக்காட்டார் முறையொன்று மொழிந்திருக்கின்றார். அதை அனுசரித்தால் கால்நாழிகைக்குள் தலைவலி நின்றுவிடும். அதைக் கேளுங்கள்.

அப்பனே தலைவலிக்குமுறைநான்சொல்வேன்
அரிதானமுறையாருமறியமாட்டார்
குப்புறவே விழுந்தொருவாய் மண்ணைக்கவ்விக்
கொஞ்சம் கொஞ்சமாயதனை விழுங்கிவிட்டால்
செப்பியதோர் தலைவலியும் நீங்கிப்போகும்
திறமான கும்பமுனி செப்பினர் முன்
ஒப்பில்லா முறையிதனை யுரைத்தேனப்பா.
உண்மைசொன்னேன் எவர்க்கும் நீ உரைத்திடாதே.

உரைப்பையெனில் தலைவலிதான் மீளக்காணும்
உள்ளபடி பரிகாரம் சொல்வேன்கேளும்
நரைத்தலையாள் ஒருத்திமுலைப்பால் சேரொன்றில்
நாய்க்கடுகும பேய்ப்புடலும் நகட்டி நன்றாய்
அரைத்ததனிற் கொடிவேலிச்சாறும் சேர்த்தே
அரகரா திழுதாக்கி அபானவாயில்
சுருக்கெனவே கட்டி ஒரு ஜாமம் சென்றால்
சுவாசம் அற்றுச் சுகமாகத்தூங்குவாரே.

என்று வைத்தியர் சொன்னவுடன் அந்தணர் மேலொன்றும் சொல்ல விரும்பாமல்

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

# இராஜ நிந்தனைச் சட்டம்.

இம்மாதம் முதல் தேதியாகிய சுக்கிரவாரம் நம் இந்திய சரித்திரத்தில் மிக்க விசேஷ நாள். அன்றுதான் ஸிம்லாவிற் கூடிய இராஜப்பிரதிநிதிச் சட்டசபையில் இராஜநிந்தனைச்சட்டம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அந்நாளே நாம நமது சுயாதீனத்தை ஒருவாறு இழந்த நாளாகும். பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் அமைந்துள்ள பெருமையெல்லாம் சுயாதீனமே. எவரும் தத்தம் மனோ அபிப்பிராயத்தைத் தைரியமாக வெளியிடும்படியாக விருந்தது. அந்தச் சுயாதீனம் போய் நாம் வாய்ப பூட்டிடப்பட்டவர்களானோம். "வாய்ப்பூட்டிடப்படின் மற்றுவா விவரென் செய்வார்." என்ற கவிக்கூற்றுக்கிணங்கப் பரிதாபமான நிலையுற்றோம். இம்மாதிரி மசோதா ஒன்று பிரேரேபிக்கப் பட்டிருக்கிறது என்றும் சமீபததில் சட்டமாக்கப் படப் போகிறதென்றும கேள்வியுற்ற புத்திமான்கள் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர். அன்னவர்களது அபிப்பிராயத்தையும் ஆக்ஷேபணைகளையும் தெரிவிக்கும் வண்ணம் போதுமான சாவகாசம் கொடுக்கப்படவில்லை. "அவசரக்கோலம் அள்ளிதெளி" யென்று இந்தியா கவரன்மெண்டார் மசோதாவை அவசரப்பட்டுச் சட்டமாக்கினது சிறிதும் சரியாகமாட்டாது. இச்சட்டம் ஏறபட யாதொரு நியாயமும் ஏற்படவில்லை. சிற்சிலவிடங்களில் குழப்பம் உண்டாகி விட்டதால் கவர்ன்மெண்டார் நடுநடுங்கி இவ்விதச சட்டத்தினாலே இக்குழப்பங்களை அடக்கவேண்டுமென்று நினைத்ததாகத் தோற்றுகிறது. நெடுநாளாக வேரூன்றியிருக்கின்ற பிரிட்டிஷ் இராஜ்யமாகிய வைர விருக்ஷத்தைச் சொற்பகாற்றாகிய குழபபமானது வேர் பறித்தெறிந்துவிடும் என்று பயந்தது வியபபினும் வியப்பே. இந்திய ஜனங்களின் விசுவாசத்தைக் கவரன்மெண்டார் ஒருமுறைக்குப் பலமுறையாகச் சோதித் தறிந்திருந்தும் பின்னும் அவநம்பிக்கைப் பட்டு இம்மாதிரியான சட்டம ஏற்படுத்தினது மிகவும் விசனிக்கத் தக்கதே. டில்லி தர்பார் நடந்த காலத்தில் ஜனங்களின் விசுவாசம் தெளிவாக உலகததாருக்கு வெளிக்காட்டப்பட்டது. அதைவிட வேறு எவ்விதந்தான் ஜனங்கள் இராஜாங்கத்தின் மீதுள்ள விசுவா

சத்தை வெளிக்காட்டுவார்கள். வருஷா வருஷம் கூடும் காங்கிரெஸ் மகாசபையில் ஜனப்பிரதிநிதிகள் ஜனங்களின் விசுவாசத்தைக்காட்டு வதையே முதற்கடமையாகப்பூண்டு கையாண்டு வந்திருப்பதை எவர் தாம் அறியார்? ஏதோ இரண்டொருவர் அங்குமிங்கும் இராஜவிசு வாசத்துக்குக் குறைவான பேச்சுக்களைப் பேசிவிட்டதால் குடி கெட்டா போயிற்று? இவ்விஷயங்களை இராஜப்பிரதிநிதிச் சட்ட சபையில் நம் ஜனப்பிரதிநிதிகளாகிய ஆனரபில் மிஸ்டர் கோக்லே ஆனரபில் டாக்டர் ராஷ்பிகாரிகோஷ் என்ற இரண்டு சிம்மங்கள் தெளிவாய் எடுத்துக்காட்டிக் கர்ச்சித்து தாம் பூண்டகடமையை எவரும் மெச்சும்படியாகச் செய்ததை நாம் ஒருநாளும் மறக்க வொண்ணாது. அவர்கள் எவ்வளவோ தைரியமாகவும் விநயமாகவும் விஷயங்களை எடுத்துக்கூறிச் சனங்களுக்கும் கவரன்மெண்டாருக் கும தாங்கள் செலுத்தவேண்டிய கடமைகளை எல்லோரும் மூக்கில் விரல் வைக்கும்படிகருச் செய்து முடித்தனர். இதுகாறும் சட்ட நிரூபணச் சபையில் இம்மாதிரி தைரியத்துடனும் விநயத்துடனும் அமிர்த வருஷம் பொழிந்தவர்கள் இல்லையாரென்றே துணிந்து கூறலாம். இம்மாதிரியாகக் கவர்ன்மெண்டார் சட்டம் செய்வதால் ஜனங்களுக்குள் அதிருப்தியுண்டாகி அந்த அதிருப்தி காலக்கிரமத் தில் பெருங்கேட்டை விளைக்கும் என்று தெளிவாகவும் சாதுரியமா கவும் எடுத்துக்காட்டினார்கள். ஆனரபில் கோக்கலே என்பவர் இவ் விஷயம் ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் அதிகமாகக் கூடுகிற கல்கத்தா வில் பிரஸ்தாபிக்கப்பட வேண்டியதை விட்டு ஸிம்லாவில் பிரஸ்தா பத்துக்கு வந்தது சரியில்லையென்றும், 32 வருஷங்களுக்கு முன் லார்ட் நார்த்ப்ரூக் காலத்தில் இந்தியா மந்திரியாயிருந்த லார்ட் ஸால் ஸ்பரி இம்மாதிரி உததாவு செய்திருக்கிறாரென்றும் தெரிவித்தார். இவை நிற்க, இந்தியா கவரன்மெண்டாருக்கு இச்சட்ட விஷயமாக அனுப்பப்பட்ட ஆக்ஷேபணைகளும் கண்டனத் தீர்மானங்களும் விசேஷக் கமிட்டியின் யோசனைக்கே வரவில்லையென்றும் இம்மாதிரி சட்டத்தைச் சடுதியில் ஏற்படுத்துகிறதற்கு யாதொரு நியாயமு மில்லையென்றும் ஏற்கனவே இருந்து வருகிற சட்டதிட்டங்கள் இதுவிஷயத்தில் ஏராளமாக இருக்கின்றனவென்றும் மாகாணகவரன் மெண்டார் வேண்டுமோனால் சமயோஜிதமாய் அப்படிப்பட்ட சட்

டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாமே யொழிய இந்தியா கவரன்மெண்டார் இவ்வாறாக அவசரப்பட்டுச்சட்டம் ஏற்படுத்த யாதொரு காரணமுமில்லையென்றும் கம்பீரமாகவும் எவரும் புகழும் வண்ணமும் எடுத்துக் காட்டினர். ஆனரபில் டாக்டர் பிகாரிகோஷும் கரடியாய்க் கத்திப் பார்த்தார். இருவரும் நியாய வாயிலாக எடுத்துக்காட்டிய விஷயங்களைக் கவரன்மெண்டு மெம்பர்களும் இராஜபிரதிநிதியும் சரியானபடி மறுக்கமுடியவில்லை. இருந்தாலும அவை செவிடன் காதிற் சங்கூதின விதமாயிற்று. ஜனங்களின் அதிருப்தியை இராஜநிந்தனையாகக் கவரன்மெண்டார் பாவிப்பது என்று கூறினதுமன்றி அவ்வாறு நினைப்பது பற்பல தீங்குகளை விளைக்குமென்றும் எடுத்துக்காட்டி வாதித்ததற்காக நம நாட்டார் அனைவரும் மேற்கூறிய இருகனவான்களுக்கும் மிகக நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராவார்கள். நாம் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுவதே நம் முதற்கடமை. அவ்வாறே நம் ஜனப்பிரதிநிதிகள் எவரும் வியந்து திருப்தி யடையும் வண்ணம் காரியத்தைச் சீரும் சிறப்புமாகச் செய்து முடித்தார்கள். இனி நாம் செய்வது யாதுளது? கவரன்மெண்டாருக்கு இதுவிஷயமாகத் தகுந்த வண்ணம் கருணை பிறக்கும்படி கருணாநிதியாகிய பகவானைப் போற்றி செய்வதுடன் நாம் எல்லாரும் செய்யும் தொழில் ஊக்கமுடையவர்களாயிருந்து தீவினையையகற்றி நன்மையைக் கடைப்பிடிப்போமாக. இச்சட்டம் என்று விலககப்படுமோ அன்றுதான் நாம் சுயாதீனம் பெற்றவர்களாவோம். அதுவரை நாம் அடிமைகளே ஆவோம். எப்பொழுது கவரன்மெண்டாருக்குக் கிருபையுண்டாகுமோ? தர்மமேஜயம் என்று மனஅமைதியுடன் நடப்பதே நம் கடமை.

பத்திராதிபர்.

# சர்க்கரைக் கைத்தொழில்.

சர்க்கரையானது ஆதியில் கரும்பினின்றுமே நம் தேசத்தில் எடுக்கப்பட்டு உபயோகப்பட்டுவந்தது. அது பழுப்பாக இருக்கும், ஆனால் அது நம் தேக சௌக்கியத்துக்கும் நம் ஆசாரத்துக்கும் ஒத்திருந்தது. சென்ற முப்பதுவருஷ காலங்களுக்குள்ளாக அந்நிய நாட்டுச் சர்க்கரைகள் வரத்தொடங்கின. பத்து வருஷங்களுக்கு முன்னும் நம் சர்க்கரையையே நாம அநேகமாய் உபயோகித்துவந்தோம. ஐரோப்பிய நாகரீகம் நம்முள் நுழையத் தலைப்படவே நாம் வெள்ளையர்களை அநுசரித்து வெள்ளைச்சர்க்கரையை அதிகமாக உபயோகிக்கத்தொடங்கினோம். நம் நாட்டு அஷ்டகிராமம்; அஸ்கா முதலிய ஊர்களிலிருந்து வந்துகொண்டிருந்த வெள்ளைச்சர்க்கரை வாயிலும் மண் விழுந்தது. ஆஸ்திரியா, பிரான்ஸ் முதலிய அந்நிய நாட்டு பீட்கிழங்கு சர்க்கரையே ஏராளமாக வரத்தொடங்கிவிட்டது. அது கரும்புச் சர்க்கரையைப்போல் அத்தனை ருசியுள்ளதுமன்று. தேகசௌக்கியத்துக்கு அடுத்ததுமன்று. இன்னும நம்நாட்டுவைத்தியர்கள் நம்பழுப்புச் சர்க்கரையையே மருந்துகட்குஉபயோகப்படுத்துகின்றனர். ஆகையால் சுவதேசிய உணர்ச்சிபெருகிவருகிற நம் நாட்டில் இனி எல்லோருமநம் சுதேச சர்க்கரையையே உபயோகப்படுத்தி இன்புறுவார்களாக. அந்நியநாட்டு வெள்ளைச் சர்க்கரையிலிருக்கும் கேடுகளை அடியிற்கண்டபடி மிஸ்டர் பி. வி. கோபாலராயர் என்ற ஒரு தேசாபிமானி எடுத்துக்காட்டிச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அதனைத் தேசாபிமானிகள் அனைவரும் வாசித்துச் சிந்தித்து அக்கேடுகளை நீக்க முயல்வார்களாக. ஆசாரங்களுக்கும் தேகசௌக்கியத்துக்கும் இணங்குமவண்ணம் நன்முறையாக வெள்ளைச்சர்க்கரை நாட்டுக்கு ஏறபடும்வரை நம் பழுப்புச் சர்க்கரையையே உபயோகித்துத் தேசக்ஷேமத்தைப் பாதுகாப்போமாக. தனவான்களும் வியாபாரிகளும கூடியசீக்கிரம் இத்தீங்கை நம் நாட்டினின்றும் நீக்க வகை தேடுவார்களாக. சிறுகச்சிறுக இவ்விஷம் நம்முள் ஊர்ந்து நமக்கு அபாயத்தை விளைவிக்கின்றதை நாம் நீள நினைந்து விலக்கினாலல்லது நமக்கு நலமுண்டாகாது. நம்

தூக்கத்தாலேயே இவ்வித துக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை எந்தத்தேசாபிமானியும் மறக்கவொண்ணாது. ஆங்கிய நாட்டு வெள்ளைச் சர்க்கரையையே உபயோகிக்கும் உத்தியோகஸ்தர்கள் கொடிய நீரிழிவு வியாதி முதலியனவற்றிற்கு உட்படுவதும் நாட்டுச்சர்க்கரையை உபயோகிக்கும் சமான்ய ஜனங்களுக்கு அவ்வித வியாதி வராமலிருப்பதும் உண்மையன்றோ. மிஸ்டர் கோபாலராயர் அவர்கள் எழுதுவதாவது:—

சரசமானதும் அன்னியர்களுடைய ஆதாவு பெற்றதுமான அன்னிய நாட்டு வெள்ளைச் சர்க்கரையைப்பற்றி சில சமாசாரங்கள் எழுதுகிறேன். அதாவது:—பொதுவாக ஹிந்துக்களுடையவும் மகமதியர்களுடையவும் மதாசாரங்களுக்கு மிகவும் அடாததாகிய மிருகங்களின் இரத்தத்தினுலும், முட்டைக்குள்ளிருக்கும் வெள்ளைக்கருவினுலும், எல்லாவித மிருகங்களிலிருந்து கிடைக்கின்ற எலும்பைக் கரியாக்கி அதன் பொடியினுலுமே இந்தச் சர்க்கரையைச் சுத்திசெய்து வருகிறார்கள். இபபடிச் சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையானது நமது ஆகாரததில் உபயோகப்படுத்துவதினுலே தேக சௌக்கியத்துக்கு இடையூறு உண்டாகக்கூடியதாயிருக்கிறது (என்சைக்லோபேடியா பிரிட்டானிகா 9-வது பதிபபு, 627-வது பக்கத்தைப்பார்க்கவும்.)

இதற்கு ஆதாரமாக ஐரோபபிய டாக்டர்கள் அபிப்பிராயப் பட்டு எழுதிய இதனடியிற்கண்ட வசனங்களையும் வாசித்துப் பார்த்தால் தெரியவரும்.

இவ்விதமாய்ச்சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையானது கொஞ்சம் சுண்ணாம்பு ஜலமும் மாட்டின் இரத்தமும நூற்றுக்கு 5 முதல் 20 வரையில் எலும்புக் கரியின்பொடியும் ஒன்றாய்க் கலக்கிவைக்கப் பட்ட ஒரு பெரிய சதுரமான செம்புத் தொட்டியில் மறுபடியும் போட்டுச் சுத்திசெய்யப்படும். சிலர் இரத்தத்தையும், துர்மாமிசத்துமே சர்க்கரையைச் சுத்திசெய்ய உபயோகிக்கிறார்கள்.

தற்காலத்தில் அநேகமாக எலும்புப் பொடியையே சர்க்கரையைச் சுத்திசெய் உபயோகிக்கிறார்கள்.

பிறகு காற்று வீசும் யந்திரத்தில் சர்க்கரையும், நன்றாக அரைக்கப்பட்ட எலும்பின்பொடியும் இரத்தமும் ஒன்றுகச்சேர்க்கப்பட்ட மிசிரத்தைப் போட்டுக் காற்று வீசுவார்கள். (See Dictienary of arts, Manyfactures and Mines 3rd Edition by Dr. Vre, London 1846, page 12 5 etc., etc).

இரத்தமானது நார்களும், வெள்ளைக்கருவும், அநேகவிதமான உப்புக்களும கூடிய ஒரு திரவ வஸ்து. ஆகையால் சர்க்கரையைச் சுத்திசெய்கிற விஷயத்தில் அதின் உபயோகமானது அருவருப்பைக் கொடுக்கக்கூடிய தொன்று மாத்திரமே அல்லாமல் நமது தேகசௌக்கியத்துக்கு விரோதமாகவும் நினைக்கவேண்டியிருக்கிறது.

இரத்தத்தை உபயோகிப்பதனுலடையும் விசேஷ லாப மென்னவென்றால், மலிவு ஒன்றேயாம

சுத்தத்தை மாத்திரமே யல்லாமல் தேக ஆரோக்கியத்தையும் ஆலோசிககாமல் ஒரு நிமிஷமாகிலும் மலிவு என்னும் யோசனையை ஏற்கவே கூடாது.

அன்னிய நாட்டிலிருந்து வந்த சாதாரணமாக விற்கப்படும் இந்தச் சர்க்கரையில் அனேக விதமான அசுத்தங்க ளிருக்கின்றன. அவையாவன:—

பூதக்கண்ணுடியின் சகாயமில்லாமல் கண்களால் பார்க்கமுடியாத ஜீவராசிகளும், தர்மாமிசத்தா லுண்டாகக்கூடிய ஜீவராசிகளும், கஞ்சிப்பசையும், நொய்களும், மரநார்களும், திராக்ஷசர்க்கரை இன்னும் அநேகமான வஸ்துககளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையினல் இப்பேர்ப்பட்ட சர்ககரையானது சாதாரணமாக ஜனங்கள் சாப்பிடுவதற்குக் கொஞ்சமாகிலும் உபயோகிக்கும்படியான ஸ்திதியில் இல்லையென்று சொல்லும்படியான முடிவிற்குக் கட்டாயமாய் வரவேண்டியிருக்கிறது.

மேலே சொன்ன ஆதாரங்களினுல் விதேச சர்க்கரையை நாம் உபயோகம் செய்வதை நிறுததிவிட்டு,நமது நாட்டில் வழங்கும் மதாசாரக் கொள்கைக்கு ஏற்றதான வகையில் செய்யப்பட்ட ஸ்வதேசி சர்ககரையை உபயோகபபடுதத வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இந்தக்காரியம் கைகூடுவதற்கு நான் கற்றுக்கொண்டுவாந வகைகள் ஏற்றவை, இந்தவகையில் சர்க்கரையைச் சுத்தி

செய்ய இரத்தமும், எலும்பின் வகைகளும், அருவருப்புள்ள வஸ்துக்களும் தேவையில்லை. ஆனால் சுத்திசெய்யத் தேவையான வஸ்துகக ளெவையெனில், நமது சுவதேசத்தில் கிடைக்கக்கூடிய மூல பதார்த்தங்களேயாம்.

நீராவியந்திரத்தினு லல்லாமல், மனிதபலத்தைக்கொண்டு திருப்பக்கூடிய யந்திரங்களை வைத்துக்கொண்டு அடியில் காட்டியிருக்கிற சொற்பத் தொகையினுலேயே சிறியதாகிய ஒரு சர்க்கரைசசாலையை ஏற்படுத்தக்கூடும்.

| | |
|---|---|
| ஹைட்ரோ எக்ஸ்டிராக்டர் அல்லது செண்டிரிபியூகல் மெஷீன் 3-க்குக் கிரயம் ரூபா. | 1300 |
| கருப்பஞ்சாற்றைக் காய்ச்ச ஆலைக்கொப்பரைகளின் கிரய்ம் ரூபா. ... ... ... ... ... | 500 |
| ஆக மொத்தம் ரூபா... | 1800 |

## கரும்பாலைகள் பிரத்தியேகம்.

மேற்படி யந்திரங்களைக்கொண்டு (822/7 பவுன் அல்லது இராத்தல் இடைகொண்ட) 8000 மணங்கு எடையுள்ள கருபபஞ் சாற்றை ஒரு கரும்பு காலத்தில் (in one working season) சுலபமாக சர்க்கரை ஆக்கலாம். இந்த ஆலையை வைத்து நடத்துவதறகு ஒரு வருஷத்துக்கு வேண்டிய செலவும், இதிலிருந்து கிடைக்ககூடிய சர்ககரையின் விலையும, அதின்பேரில கிடைக்கக்கூடிய லாபமும இதனடியில் எழுதப்பட்டிருக்கிறது :—

| | |
|---|---|
| சர்க்கரையின் உத்தேச கிரயம் ஏறக்குறைய ரூபா. | 7720 |
| கருப்பஞ்சாற்றின் விலை ரூபா ... ... ... | 4096 |
| சர்க்கரைச்சாலை வேலைக்காரர் சம்பள வகை ரூபா... | 1390 |
| ஆக செலவு ... | 5486 |
| ஒருவருஷத்திய மொத்த லாபம் ரூபா ... ... | 2234 |

முதல வருஷத்திலிருந்தே யந்திரத்தின் விலை யல்லாமல் கொஞ்சம் லாபமும் கிடைககக கூடியதாக விருக்கிறது அடுத்த வருஷகக ளிலிருந்து மிதுதியான லாபம சம்பாதிக்கக் கூடும்.

முதல் வைத்து நடத்தக் கூடிய கனவான்கள் தங்கள் தாய்நாட்டின் நன்மைக்காகவும், தங்கள் மதாசாரத்துக்காகவும் முன்வந்து இந்த ஸ்வதேசக் கைத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவார்களாக.

பத்திராதிபர்.

# இந்தியாவில் ராஜத்துரோக சரித்திரம்.

(அமிர்தபஜார் பத்திரிகை.)

இந்திய இராஜ நிந்தனை (Sedition) என்பது இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி ஏற்பட்டகால முதல் தான். 1870-ம் வருஷம் வரையில் இங்கே ஸெடிஷன் என்பது ஒன்றுமில்லை. ஏன்? இராஜ்யாதிகாரிகளுக்கு ஜனங்களிடத்தில் போதிய நம்பிக்கை இருந்தது. ராஜ்யாதிகரிகள் ஜனங்கள் அங்கியரால் ஆளப்படுகிறார்களென்றும் அறியப்படாமல், அவ்வளவு சுகமாக வாழ வேண்டுமென்று விரும்பினார்கள். ஆகையால்தான் கிரியாம்சையிற்கூடத் தங்களுக்குத் நம்பிக்கை குறைவு இருப்பதாகக் காண்பிப்பதில்லை. சிப்பாய்க்கலகத்திற்குப் பின்னும்கூட 1860-ல் இந்தியன் பினல் கோடு சட்டமாக்கப்பட்டும், இந்தியாவுக்கென்று ஸெடிஷன் லா ஒன்றுமில்லை. இந்த இராஜ தந்திர நிர்வாகத்தால் அவர்கள் ஏதேனும் கெடுதலை யடைந்தார்களா? இதற்கு மாறாக ஜனங்கள் பிரிட்டிஷ் இராஜங்கத்தில் பூர்ண விசுவாசம் வைத்ததன்றி, தங்கள் செய்கைகளாலும் இராஜாங்கத்திற்கு விரோத ச்செய்கைகள் செய்யமாட்டார்களெனக் காட்டிக் கொண்டார்கள்.

முற்காலத்திய ஆங்கில அதிகாரிகள் இராஜாங்கத்தை இராஜ நிந்தனைச் சட்டமென்றொன்றின்றி அமைதியுடன் ஆளக்கூடுமானால் இப்பொழுது அச்சட்டத்திற்கு அவசியமென்ன? அக்காலமோ ஜனங்கள் பிரிட்டிஷ் இராஜங்கத்திற்குக் கட்டுப்படாமலும், ஆயுதப் பயிற்சி யுடையவர்களாயும், சண்டையிடுவதில் அனுபோகமுடையவர்களாயுமிருந்த காலம். ஆனால் இந்த துர்க்குணமான விதை 1870-ல் நடப்பட்டது. 1898-ல் லார்டு எல்ஜினது கவர்ன்மெண்டின் கீழ் கப்பு, கவர், கிளைகளுடன் பரந்த விருக்ஷமாயிற்று, இப்பொழுதோ முதிர்ந்ததாகி விஷம் பொருந்திய கனிகளையுடையதாய், முன் ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கு மிருந்த நல்லபிப்பிராயத்தைக் கெடுத்துவருகிறது.

இந்தியாவிற்கு ஸெடிஷன் லா என்று ஒன்று வேண்டியதில்லை யென்பது 1870-ல் 124A. செக்ஷனை உண்டாக்கியபோது, அப்பொழுது லா மெம்பராயிருந்த கனம் பிட்ஸ் ஜேம்ஸ் ஸ்டீபனால் விசிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் படிப்போர் இ. பி, கோடு 1837-ல் எழுதப்பட்டதெனத் தெரிந்திருக்கும், 124A. செக்ஷன் 1837-ல் எழுதப்பட்ட இ. பி, கோடின் 113-வது செக்ஷன். ஆனால் 1860-ம் வருஷத்து இ. பி, கோடியிருந்து 113-வது செக்ஷன் தள்ளப்பட்டது. மிஸ்டர் ஸ்டீபன் அது ஞாபகம்பிசகாக விடப்பட்டுப் போய்விட்டதென்று சொல்லியபோதிலும், அதற்குத் தகுந்த அத்தாக்ஷியில்லை. ஆனால் அக்காலத்தில் லண்டன் மாநகரத்தில் பிரசுரமாகும் ஸ்பெக்டேட்டர் (Spectator) பத்திரிகை அது வேண்டுமென்றே விடப்பட்டதென்று பின்வருமாறு 1870 ஆகஸ்டில் எழுதிற்று. 'அலகபாத்திலிருந்த ஜெனரல் வானின் பயத்தைப்பற்றி குறிக்கும்பொழுது—மிஸ்டர் ஸ்டீபன் அவசரமாக ஸெடிஷனைப் பற்றி ஒரு லா தயார் செய்கிறார். அது பினல்கோடு தயாரித்தபோது மறந்து போய்விட்டதென்று சொல்வதற்கில்லாமல், ஆதிகாலத்தில் இராஜ்யாதிகாரத்திற்காரம்பித்த ஆங்கிலோ இந்தியர்கள் கலகம் என்பது இந்தியாவில் குழப்பமே (civil war) தவிரவும், ஆபுதப்பாணிகளாய்க் கிளம்பும் காலத்தில்தான் அடக்கவேண்டும். இந்தப் புதிய குற்றத்தை—அவிசுவாசத்துக்குள்ள எண்ணங்களை யுண்டாக்கப் பிரயத்தனப்படுவது (பிராஞ்சிய கெட்ட வார்த்தைகளாகிய வெறுப்பு, அலக்ஷியம் என்பதுபோல்) ஆவதால் மிஸ்டர் ஸ்டீபன் கொஞ்சம் தப்பான வழியிலிறங்குகிறார்.'

நாம் ஏன் அந்த செக்ஷன் தள்ளப்பட்டதென்று சொல்லமுடியுமென நினைக்கிறோம்? பலவிதமான மத ஜாதி பேதங்களுடைய ஒரு தேசத்தை ஆளுபவர் அந்நியர்களாக விருந்தார்கள். கவர்ன்மெண்டார் தாங்கள் தவறுதல் செய்யாமலிருப்பதற்குப் போதிய ஒத்தாசை வேண்டியிருந்தது. அந்த ஒததாசையைக் கட்டுப்படுத்தப்படாத இந்திய பத்திரிகைகள் மூலமாக எதிர்பார்த்தார்கள். இந்திய பத்திரிகைகளை வேவுக்காரருக்கு சமானமாகப் பாவித்து வந்தார்கள் தங்கள் கோரிக்கைகளைக் கெடுத்துவிட்டபோகிறதென நினைத்து,

இப்பொழுது செடிஷன் என்று சொல்லப்படுவதைப்போல ஒன்றிரண்டு எழுதப்பட்டாலும் கவனித்தார்களில்லை.

உண்மையில் மிஸ்டர் ஸ்டீபன் மகோதாபீனல்கோடின் 113-வது செக்ஷனை சேர்த்தபோது பேசும் சுதந்தரத்தைப் பூட்டிட எண்ணமில்லாமல், அக்காலத்தில் நடந்த ஒரு கலகத்தையடக்க ஏற்படுத்தினர். சிப்பாய்க்கலகம் முடிந்த பிறகு, மகமதிய வகுப்பாருள் வகாபி என்போர் செடிஷன் சம்பந்தமானவற்றைக் கல்கத்தாவுக்கு அருகாமையிலும் பிரசங்கித்தார்கள். டக்கா, பாரிஸால், பரீத்பூர், ஜஸ்ஸோர், ராஜஷாயி முதலான இடங்களிலுள்ள மகமதியர்கள் பிரிட்டிஷ் இராஜாங்கத்தை எதிர்க்க ஆரம்பித்தார்கள். பாட்னாபுரமென்னும் பாட்னாவும் கலக இடமாயிற்று. இன்னும் ஒரு ராஜப்பிரதிநிதியும், ஒரு கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜூம் மகமதிய மதாவேசக்காரர்களாற் கொல்லப்பட்டார்கள். சாமர்த்தியமுள்ள மாஜிஸ்திரேட்டுகளும், ஒற்றர்களும் இந்தக்கலகம் இந்தியாவில் பாதிப்பாகம் ஏற்பட்டிருப்பதாக வெளிப்படுத்தினார்கள். இந்த அபாயத்தை நீக்க ராஜதுரோக சட்டம் ஏற்பட்டதேயொழிய, இந்திய பத்திராதிபர்களைச் சிறையிடுவதற்கல்ல. அதற்காகவே மிஸ்டர் பிட்ஸ்ஜேம்ஸ் ஸ்டீபனும் கெடுதிசெய்ய நினைப்பும், துஷ்கிருத்தியங்களுக்கு ஏவுதலும் இருந்தால்தான் இராஜதுரோகமென்றார்.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை இருக்கிறது. இந்தச் சட்டமானது இன்னும் ராஜஷாயி முதலான இடங்களில் இருக்கும் விசுவாசமற்ற மகமதியக் கலகக்காரர்களுக்கு ஏற்பட, இந்தியத் தலைவர்களும் பத்திராசிரியர்களும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டும், விலங்கிடப்பட்டும் சிறையிலே அடைக்கப்படுகிறார்கள். இது காலத்தின் கொடுமை. இந்துக்கள் அவர்களது மேல்தரப்படிப்பால் சட்டநிருபணசபை மெம்பர்களாயிருக்க அந்தஸ்துடையவர்களாயிருப்பதற்காகவே அவர்களை நீக்கி, ஒன்றமறியாத ஒரு மகமதிய வகாபி வகுப்பாரின் கொடுஞ்செயலால் ராஜத் துரோகசட்டம் உண்டானாலும் இந்துக்கள் ராஜபக்தியற்றவர்களென்றும், மகமதியர் ராஜபக்திக்காரர்களென்றும் சொல்லப்படுகிறது.

மசோதா பினல் கோடு 113-வது செக்ஷன்படி அநுசரிக்கு முன் மிஸ்டர் ஸ்டீபன் அந்த 124 A. செக்ஷனுடன் இதுதான் "ராஜ அவிசுவாசம்" எனச்சேர்த்து, அதன் மூலமாய்ப் பேச்சு உரிமையைக் காப்பாற்றினர்; அதாவது (1) எழுதியவராவது, பேசியவராவது துரோகசிந்தனையின்றி யிருந்தாலும், (2) ஜனங்களைக் கெட்ட காரியம் செய்யும்படி தூண்டாவிட்டாலும் ராஜத்துரோக மல்லவென்ற விவரண மிரண்டு.

கௌன்சிலின் முன்பேசிய பலதடவைகளிலும் மிஸ்டர் ஸ்டீபன் தன் "விவரணத்தை" வற்புறுத்தியதுமன்றித் தலைவர்களும், ஆசிரியரும் தங்கள் பேச்சிலாவது, எழுத்திலாவது ஆங்கில அரசாட்சியை நீக்கவேண்டுமென்ற எண்ணமில்லாவிட்டால் ராஜத்துரோக மல்ல வென்றார்.

1875-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 2-ந்தேதி தன்பில்லை வாசிக்கும்போது சொன்னதாவது:—

"எழுதுபவராவது, பேசுபவராவது நேரிலோ அல்லது பிறர் மூலமோ பலத்தை உபயோகிக்கும்படி (எதிர்க்கும்படி) சொல்லாத வரையில் இந்த செக்ஷனுக்குட்பட மாட்டார்."

இங்கிலாந்திற் கூட பர்ன்சு வகையார் கேசில் ஜட்ஜு கேவ் என்பவர்"ராஜத்துரோகக் குற்றத்தில் பேசியவராவது எழுதியவராவது துஷ்கிருத்தியங்களைச் செய்யும்படி தூண்டினதாகவிருக்கவேண்டு" மென்கிறார். சலிவன் கேசில் ஜட்ஜு பிட்ஸ்ஜிரால்டும் இதேமாதிரிதான் பேசுகிறார். ஜஸ்டிஸ் ஸ்டீபன் இங்கிலாந்து கிரிமினல் லா இரண்டாவது பாகத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்:—"ஒரேவார்த்தையாக ஒழுங்கீனத்தையும் துஷ்கிருத்தியத்தையும் செய்யத் தூண்டினலொழிய ராஜத்துரோகமல்ல."

இதனல் இங்கிலீஷ்லா பிரகாரமும், இந்திய ராஜத்துரோக விவகாரஸ்தரான மிஸ்டர் ஸ்டீபனது எண்ணப்படியும் ஒருவரை ராஜத்துரோகத்துக்குத் தண்டிக்குமுன், பப்பளிக்கில ஒழுங்குத்தப்பான செய்கைகளைச் செய்யத் தூண்டியதாக ஏற்படவேண்டும், இதுவரையில் இங்கிலாந்தில் அப்படி செடிஷனுக்குச் சார்ஜு செய்யப்பட்ட

தாகத் தெரியவில்லை. மிஸ்டர் பார்ன்சின் பேச்சினால் கலகமுண்டாயும், ஜூரிகள் குற்றமில்லை யென்று விட்டுவிட்டார்கள்.

*1898-ல் லார்டு எல்கின் கவர்ன்மெண்டார் மன நிலை தடுமாறி ஸெடிஷன் லா இப்பொழுது உள்ளதை ஏற்படுத்தினார்கள். பம்பாயில் பிளேக் பரவிற்று. அதை வேரறுக்க உத்தரவு வந்தது. அதற்கு மருந்து ஒருவரினின்றும் ஒருவரைப் பிரித்தலே என்றார்கள் அப்படிச் செய்யும்படி உத்தரவாயிற்று. மனைவியைக் கணவனினின்றும், பிள்ளையைப் பெற்றோரிடத்தினின்றும் பிரித்து வைத்தார்கள். இதை ஜனங்கள் எதிர்க்கவே, மேற்படி லாவை அமுலுக்குக் கொண்டுவர பிரிட்டிஷ் சைநியங்கள் கிளம்பின. இதைச்சகிக்கமுடியாது ராண்டு, ஜர்ஸ்டு என்னு மிரண்டு ஐரோப்பியர் கொலையுண்டார்கள். இதற்குப் பதில் ஏதாவது செய்யவேண்டுமே யென்று நாட்டுச் சகோதரர்களைத் தேசப்பிரஷ்டம் செய்தார்கள். மராத்திய பத்திராசிரியர்கள் சிறையிடப்பட்டார்கள். முடிவாக எதைவேண்டுமென்றாலும் ராஜத்துரோகம என்று சொல்லும்படி அவ்வளவு சுருக்கமாகச் சட்டம் செய்யப்பட்டது. இரண்டுவழிகளும் அடைக்கப்பட்டு ஒவ்வொருபததிராதிபனும்மாஜிஸ்திரேட்டின் தயவில்வைக்கப்பட்டான்.

சுதேசமித்திரன்.

# சம்மாசாரக்கொத்து.

இப்பொழுது இந்தியாவில் பிரயாணஞ் செய்துவரும் ஸம்ஸ்கிருத பண்டிதராகிய மிஸ்டர் மெக்டானல் என்னும் ஐரோப்பியர் பூனாவிற்கு வந்தபொழுது ஸ்ரீ பாலகங்காதரதிலகர், ஸ்ரீ ரெகுநாத புருஷோத்தமன் பிராஞ்சிபே, ஸ்ரீ ராஜவாதே, திராவிட முதலிய கனவான்களுடன் சம்பாஷணை செய்தாராம். எல்லோரும் சிறிது நேரம் வேதாந்த விஷயமான தருக்க சம்பாஷணை செய்தார்களாம்.

* * * *

மத்திய ஆசியாவில் பொக்காரான் என்னும் இடத்தில் பலமான பூமியதிர்ச்சி யுண்டாயிற்றெனவும் அந்த அதிர்ச்சியினால் ஒரு மலையிலிருந்து பெருங்கற்கள் புரண்டுவந்து பொக்காரான் பட்டணத்தில் விழுந்து உருண்டதில் அப்பட்டணத்திலுள்ள 15 ஆயிரம் ஜனங்களும் இறந்துபோனதாகவும் டாஷ்கெண்டு என்னுமிடத்திலிருந்து சமாசாரம் வந்திருப்பதாய்ச் செண்ட் பீட்டர்ஸ்பர்க் நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

* * * *

சென்னைச் சித்திரக் கலாசாலையில் வருகிற பிப்ரவரி மாசத்தில் ஒரு நெசவுப்போட்டி நடக்கப்போகிறது. இதற்குச் சென்னைக் கவர்ன்மெண்டார் ரூ. 2500 உதவுகிறார்கள். இது முற்றும் நமது "நாஷனல் பண்டு இண்டஸ்டிரியல் அஸோஸியேஷனி"ன் மேற்பார்வையிலேயே நடக்கப்போகிறது. இந்தியாவிலுள்ள எல்லாத் தறிகளையும் தருவித்துப் போட்டி நடக்கப்போகிறது. ஆகையால் இதற்கு எல்லோரும உதவி செய்வார்களாக.

• • • •

தொழிற்சாலை வேலைக் கமிஷன்:—தொழிற்சாலை வேலைக்கமிஷன் சபையார் பம்பாயில் இரண்டுதினம் விசாரணை நடத்தினார்கள். நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலைதான் நியாயமென்று கொள்ளக்கூடிய பல சாக்ஷியங்கள் கிடைத்தன. வேலை செய்பவர்கள் இத்தனை பிராயத்துக்கு மேற்பட்டவர்களாய் இருக்கவேண்டுமென்ற

நிபந்தனை யேற்படுத்த வேண்டுமென்றும் அறியப்பட்டது: பத்துக் கமிஷனர்கள் திடீரென்று சில தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டதில் காரியங்கள் ஒழுங்காகவே நடந்து வந்தனவாம்.

* * * *

மைசூரில் கூடிய சீக்கிரம் ஒரு நீக்குச்சித் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்படுமென்று தோன்றுகின்றது. நீக்குச்சித் தொழில் கற்றுக் கொண்டு வந்திருக்கும் பூனா நகர்வாசியாகிய ஸ்ரீ விநாயக கணேச ஜோதி யென்பவர் இத்தொழிற்சாலை தொடங்கப்போகின்றார். இவருக்கு மைசூர் கவர்ன்மெண்டார் முதலில் இனாமாக விறகும், ஒரு நீக்குச்சிமரமும், வேலை செய்வதற்கு இடமும் தந்திருக்கிறார்கள். இந்தத்தொழிற்சாலை தொடங்குவதற்குக் குறைந்தபக்ஷம் 40 ஆயிர ரூபா முதல் வேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

* * * *

மிஸ்டர் கயர் ஹோர்டி:—இம்மாதம் 14௳ இந்தியாவின் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு தூத்துக்குடி வந்துசேர்ந்து இந்தியா க்ஷேமவிஷப்மான சில உறுதிமொழிகள் கூறிப் பின் கொழும்பு மார்க்கமாய் ஆஸ்திரேலியாவுக்குக் கப்பலேறிச் சென்றனர். இவர் தம் பூரண அநுதாபத்தை நம்மிடம் வைத்ததற்காக நாம் இவருக்குப் பன்முறை கடமைப்பட்டவர்களாவோம். இங்கிலாந்து சென்றதும நம்தேச சீர்திருத்த விஷயமாய்ப் பல முயற்சிகள் செய்து நம் நாட்டுக்கு நன்மை விளைவிப்பார்களென்று நம்புகிறோம்.

* * * *

லாகூரில் மகாபண்டிதை யெனவும் தருமவதி யெனவும் கீர்த்தி பெற்றவரும் சீக்கிய ஜாதியைச் சேர்ந்தவருமாகிய லர் தாராணிஉம் ராஸ்வலிங் என்னும் ஒரு மாது சில தினங்களுக்குமுன் காலஞ்சென்றார். சென்ற 1905-ம் ஆண்டில் லாகூர்ப் பக்கத்தில் உண்டாயிருந்த கொடிய பஞ்ச காலங்களில் இம்மாது சிரோமணி தம்முடைய வரும்படிகளையெல்லாம் ஏழைகளுக்குக்கொடுத்ததுமன்றி அவ்வேழைகள் உண்ட கேவலமான கூழையே தாமும் சாப்பிட்டுக்கொண்டிருந்தனராம். பிழைப்புக்கு வழியின்றி ஏழையென்று சொல்லித் தம்மிடம் வந்தவர்களுக்கு இவர் கொடுத்திருக்கும் பொருள் ஆயிரக்கணக்காக மதிப்பிடப்படுகின்றது.

தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த நம் லாலாஜீபதிராயும், சர்தார் அஜிதசிங்கும் விடுதலைசெய்யப்பட்டுத்தம் சுவதேசத்துக்குக் கொணர்ந்துவிடப்பட்டனர். கவரன்மெண்டாருக்கு இப்பொழுதா வது காருண்யம் உண்டாயிற்றே என்பதைப்பற்றிச் சந்தோஷிக்கி ருேம். ஜனங்கள் கூக்குரல்போட்ட காலத்திலேயே இதனைச் செய் திருப்பார்களாஞல் நாடெல்லாம் புகழும் நம்பிக்கையு முண்டாகி ஜனங்கள் அதிக விசுவாசம பாராட்டுவார்கள். சர்வஜன சம்மத மான காரியங்களைக் கவரன்மெண்டார் அப்போதைக்கப்போது கவ னித்து ஜன திருப்திக்கேற்பச் செய்து வருவார்களாஞல் பிரிட்டிஷ் இராஜாங்கம் நீடூழிகாலம் நிலை பெற்றிருக்க யாதொரு தடையும் இராது. ஜனங்கள் பலமே பெரும்பலமாக நினைக்கவேண்டுமே யொழிய போலீஸ்காரருடைய பலத்தையும் பட்டாளத்தாருடைய பலத்தையும் மட்டிலும் நம்பிஞல் மோசமே. ஜனப்பிரதிநிதிகள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் ஜனங்களின் மஞேதருமத் தை அறிந்து பாரபக்ஷமின்றி அவர்களுக்குத் திருப்திகரமாக நடப்ப தே நல்ல அரசாட்சியின் இலக்ஷணமாகும்.

சுதேசீயம்:—பின் வருகிறபடி ஒவ்வொரு ஜில்லாவும் நடக்க முபலவேண்டுமென்று ஒருவர் எழுதுகிருர்;—

(1) சுதேசியப்பற்று, நஷ்டப்பட்டும் இந்திய வஸ்துக் களை வாங்குதல், இந்தியத் தொழில்கள் முதலிய வைகளாக்குதல்.
(2) பிரசங்கம், துண்டு விளம்பரம் முதலானவைகள் மூலமாய் ஜனங்களுக்கு அறிவை யூட்டுதல்.
(3) ஒருவருக்கொருவர் உண்டாகும் சண்டைகளை மத்தி யஸ்தர்கள் மூலமாகத் தீர்த்துகொள்ளுதல்.
(4) கூடியவரைப் பொதுப்படிப்பு, தொழிற் படிப்பு இவைகளைச் சொல்லிவைத்தல்.
(5) சுகாதாரம.
(6) செட்டுமுறைக்குற்றது.
(7) கூடியவரை ஆசார சீர்திருத்தம்.
(8) இந்து மகம்மதியர்களுக்குள் நேசப்பான்மை அதி கரித்தல்.

பத்திராதிபர்.

சிவமயம்.

# குறுக்குத்துறை யென்னும்

# திரு உருமாமலைச் சிலேடை வெண்பா.

## காப்பு.

தூயவுரு மாமலையிற் றோன்றுஞ் சுடர்வடிவேற்
சேயருள்பெற் றுய்யச் சிலேடைவெண்பா—வாயமலர்த்
தாரொன்று தந்திறைஞ்சச சத்திசிவக் தாமுதவுங்
காரொன்று தந்திமுகன் காப்பு.

நன்றுமுத்தி சேர்துறைக்கு ணுடங்கா ளும்விரைவிற்
றுன்று குறுக்குத் துறையெனவே—யென்றுந்
திகழும் பதிக்காஞ் சிலேடைவெண்பாக் காப்பு
புகழும்பன் மாமுகன்றாட் பூ.

## நூல்.

பூவியையுங் காவின் புறமும்பொரற் காளையரும்
வாவியை வாயுமுரு மாமலையே—தேவியொரு
பாதியா கத்தன் பணியவோம் பண்டருளு
மாதியா கத்தன் மனை. (க)

குறிப்புரை:—மலர்கள் பொருந்தும் சோலையின் பக்கம் நாகத்தைப் பொருந்தும். அழகியஆடவர்விவாகசம்பந்தத்தை ஆராயும்(வாவு—விவாகம்)

ஆதாரங்கூ ரும்பொருநை யாற்றினிலு மன்பரிலு
மாதரங்கள் கூடுமுரு மாமலையே—பூதரமா
மங்கைக் குடையா ரருள வருகுறமான்
மங்கைக் குடையார் மனை. (உ)

ஆசைமிகும் தாம்பிரபருணி நதியில் பெரிய அலைகள் சேரும். அன்பர்களிடத்தில் பெண்களந்தந்த இடந்தோறும் ஊடலைசெய்யும்.

கானத்தின் சொல்லார் கருங்குழலுங் கற்றோரு
மானத்தந் தள்ளுமுரு மாமலையே—வானத்
திருப்பரங்குன் றாரமரு வெஞ்சுதையை யென்றீ
திருப்பரங்குன் றாரமருஞ் சேர்வு (ங)

இசைபோலும் இனிய சொல்லையுடைய மாதர் கரிய கூந்தல் பெரிய இருளைப்போக்கும். படித்தவர் பெருமைதங்கிய நூல்களை வாரிக்கொள்ளும்.

> எந்த விடரிடத்தும் யாருமடி யாரிடத்தும்
> வந்தனஞ் செய்யுமுரு மாமலையே—சந்தனமாஞ்
> சாரலைவாய்த் தங்கினர் தாமாஞ்சூ ரர்த்தடிந்து
> சீரலைவாய்த் தங்கினர் சேர்வு. (ச)

எந்தக்காமுகரிடத்திலும் மன்மதன் ஐந்து புட்பபாணத்தையேவும். (வந்தன் - மன்மதன்.) தொண்டர்களிடத்தில் எல்லாரும் நமஸ்காரஞ்செய்யும்.

> ஓங்குசெல்வர் மந்துரையு மொள்வளையூ ரோடைகளும்
> வாங்குதிரை யாக்குமுரு மாமலையே—தாங்கு
> கழனித் தலத்தார்க் கடம்பணிவார்க் கீயும்
> பழனித் தலத்தார் பதி. (ரு)

உயர்ந்தசெல்வரது குதிரைக்கூடத்தில் தாவுகின்ற குதிரை கட்டப்படும். ஒளிதங்கிய சங்கங்களுரர்ந்து செல்லுந் தடாகங்கள் வளைவாகிய அலைகளையுண்டாக்கும்.

> காதலர்வேட் டற்குமவர் காசினியி லோங்குகைக்கு
> மீதருமஞ் சாருமுரு மாமலையே—போத
> மிருவேர கத்தினர் மன்னுவார் வாழ்த்துந்
> திருவேர கத்தினர் சேர்வு. (சு)

நாயகர் விவாகஞ்செய்வதற்குப் பெண்களு மழகு நிறையப் பெற்றிருக்கும். (அழகு உத்தமநாயகிக்குள்ள ஆறுகுணங்களுளொன்று.) அந்த நாயகர் உலகத்திலுயர்வடையும் பொருட்டு அவரிடத்துப் பெரிய தருமஞ் சேரும்.

> நன்றிந்த நாடகமின் னாராலன் னார்நடுவான்
> மன்றக் கிளைக்குமுரு மாமலையே—குன்றந்
> தொறுநாட கத்தரார் தோத்திரஞ்செய் தாளு
> மிறுநா டகத்தரா ரில். (எ)

நன்மையுடைய அழகிய நடனப்பெண்களால் நடனசபையனுபவிக்கப்படும். அப்பெண்கள் இடையால் மிருதியும் நூலிலைத்துவிடும்.

பண்ணேர் மறைமொழியைப் பாவலர்க்குப் பன்முறையே
மண்ணுக மாற்றுமுரு மாமலையே—கண்டு
பழமுதிர் சோலையத்தர்ப் பாற்றினார் மைந்தர்
பழமுதிர் சோலையத்தர் பற்று. (அ)

தொன்றுதொட்டுள்ள வேதவோசையைத் தவளைகள்வயலிற்செய்யும். வித்துவான்களுக்குப் பலவித மயக்கத்தை(அவர்து)நெருங்கியஅறிவு மாற்றும்.

ஓதலிற்றேர் வாதிகள்கூ டுங்கான் மருந்துணுங்கால்
வாதங் கலங்குமுரு மாமலையே—சீதமிகு
மங்கதிர்கா மஞ்சார்வா ரந்தடஞ்சூழ்ப்பொலியு
மங்கதிர்கா மஞ்சார்வா ரார்வு. (கூ)

படித்தலாற்றெளிந்த வாதஞ்செய்பவர் கூடும்போது விவாதம் அவ்விடத்துப் பிரகாசிக்கும். (வியாதியாளர்) மருந்துண்ணுமிடத்து வாதநோய் உருவழியும். எனவே இனம்பற்றிப் பித்தசிலேட்டும நோயுமங்ஙனமா மென்பது போதரும்.

வேலமுழு நீர்த்திரையு மேல்வளரு மென்காவு
மாகம் பொருதக்குமுரு மாமலையே—பாக
மொருத்திக் களித்தார்க் குபதேசித் துள்ளந்
திருத்திக் களித்தார்கள் சேர்வு. (க0)

விரைவுபொருந்திய தண்ணீரின் அலைகள் பெரியசங்கங்களை(க்கரையிலே) ஒதுங்கச்செய்யும், மேலோங்கிவளரு மெல்லிய சோலைகள் ஆகாயத்தை யூடுருவிச்செல்லும்.

ஈடகலில் வாழ்வா ரிருத்தற்கு மேற்போர்க்கு
மாடங் களிக்குமுரு மாமலையே—வேடமினார்
தாமுருக வேடனுருத் தாங்கிமணந் தான்செய்த
மாமுருக வேடன் மனை. (கக)

ஒப்புநீங்கிய இல்லறத்தா ரிருத்தலின்பொருட்டு வீடுகளைச்சந்தோஷிக்கும். யாசகர்க்குச செல்வத்தை அவ்விடத்து அருளும்.

அஞ்சநடை யாரெவரு மாலவா வம்பலவு
மஞ்சாக மண்ணுமுரு மாமலையே—நெஞ்சதனுள்
மாறிரண்டு கண்ணார் மனத்துறவரார் மன்னுமரு
ளாறிரண்டு கண்ணா ரகம். (கஉ)

அன்னப்பறவைபோலும் நடையுடைய பெண்களெல்லோரும் மேகம் போலுங் கூந்தலையழகுபெறமுடிக்கும். பாத்திகள்பலவும் மஞ்சளைத் (தம்) இடத்துப்பொருந்தியிருக்கும்.

சீரணங் கொக்குமின்னார் செம்முலையு மும்மதமும்
வாரணங் கொட்டுமுரு மாமலையே—யாரணங்க
ணீடுபுக லப்பார்ப்பார் நெஞ்சினீர் வேலுடனே
கூடுபுக லப்பார் குடி. (கங)

சிறப்புற்ற தெய்வப்பெண்கள் போலும் பெண்களுடைய சிவந்த கொங்கைகள் கச்சினழகைப் பொருந்தும். மூன்று மதங்களையும் யானைகள் சிந்தும்.

காலூர் மதன்விடரிற் கண்மலர்ப்பூங் காவனத்தின்
மாலூரம் பூக்குமுரு மாமலையே—வேலூர்
தருந்துதிக்கை யன்பினோர்த் தாங்கு மதநீர்
தருந்துதிக்கை யன்பினோர் சார்பு. (கச)

தென்றற்றேர் செலுத்துமன்மதன் காமுக ரிடத்திலே மயக்கத்தைச் செய்யும் (புட்ப) பாணங்களைச்செலுத்தும். தேனொழுகாநின்ற பூஞ்சோலைகளிலே வில்வமரங்கள் மலரும்.

கானவி துறுமளிசூழ் காவுங் கழனிகளும்
வானீர தடுக்குமுரு மாமலையே—யானந்த
வெள்ளத் துறைகுவார் மேவச்செய் வேலவரென்
னுள்ளத் துறைகுவா ரூர். (கரு)

இசை நெருங்கிய வண்டுகள் சுற்றுஞ்சோலைகள் மேகத்தை(ப்புறம்போகவொட்டாது) தடைசெய்யும். வயல்கள் வெள்ளிய சங்கங்களைப்பொருந்தியிருக்கும்.

மீதங் கரசமகார் வீதிதொறும் வீடுதொறு
மாதங்க மேவுமுரு மாமலையே—போதயிலேற்
காயிரவெள் ளத்தான் கடைக்கணிப்பான் பூதபிரண்
டாயிரவெள் ளத்தா னகம். (கசு)

மேன்மை பொருந்திய இராசபுத்திரர் தெருக்கடோறும் யானையை நடாத்தும். கிருகங்கடோறும் பெருமை தங்கியசுவர்ணம்பொருந்தும்.

ஆசைக் கடுக்குமின்னா ரங்கமுநா லாய்ந்தவரு
மாசைக் கடுக்குமுரு மாமலையே—பூங்கமடங்
தங்குமாற் றுள்ளார் தமதுருவந் தங்கநிறம்
பொங்குமாற் றுள்ளார் புரி. (௧௭)

அன்புக்கு ஒத்திருக்கும் பெண்கள்சரீரம்பொன்னை நிகர்க்கும். சாஸ்திர ஆராய்ச்சியுடையார் குற்றத்தைக் கோபிக்கும்.

காவிக்குண் முண்டகமுங் காவுக்குள் வாளைகளும்
வாவிக் குதிக்குமுரு மாமலையே—சேவிக்குந்
தொண்டரளக் கத்திகையார் தோளீரா றிற்சூட்டுந்
தண்டரளக் கத்திகையார் சார்பு. (௧௮)

நீலோற்பல மலர்நடுவிலே தாமரைமலர்கள் தடாகத்தினிடத்துத்தோன்றும். சோலைகளினிடத்து வாளை மீன்கள் பாய்ந்து குதிகொள்ளும். வாவிக்கு, உருபுமயக்கம்.

தண்டா வயற்கயலைத் தாருவன்னார் தங்கரத்தை
வண்டான மேயுமுரு மாமலையே—தொண்டாரு
மன்ப ருளத்துதிப்பா ரக்குறவ ரங்கனைபை
யின்ப ருளத்துதிப்பா ரில். (௧௯)

நீங்காத வயலிலுள்ள கயல்மீன்களை நாரைப்பறவை யுண்ணும். கற்பக விருக்ஷம்போன்றவர் கையை வளந்தங்கிய கொடை மேவும்.

வெய்யகர நீட்டுமலை மேற்கரியும் வித்தகரு
மையலைத் தீர்க்குமுரு மாமலையே—யுய்ய
மையில்வாக னத்தன் மலரோன்மால் போற்று
மையில்வா கனத்தன் மனை. (௨௦)

வெப்பத்தையுடைய துதிக்கையை மலைமேனின்று நீட்டுகின்ற யானைகள் மேகத்தை யலைத்து இழுக்கும். அறிவினுயர்ந்தவர் மயக்கத்தைதப்போக்கும்.

ஒண்மையமை வள்ளியோ ரும்மடவா ருங்கண்ணும்
வண்மைய வாவுமுரு மாமலையே—பெண்மையொரு
பங்குடையச் செய்தாரப் பாமகுரு வாயென்றே
யிங்குடையச் செய்தா ரிடம். (௨௧)

புகழமைந்த வள்ளற்றன்மை யுடையார் கொடுத்தலை விரும்பும். பெண்கள் மையுண்டகண்கள் வரன் கெடுமபடி (அதன்மேலே) தாவும்.

சோராமின் னூர்முலையுந் துன்பத்தை ஞானிகளும்
வாரா தரிக்குமுரு மாமலையே—பேராது
பண்டைக்கா லம்புயத்தார் பைங்கடம்பா தக்கொண்டார் •
தண்டைக்கா லம்புயத்தார் சார்பு. (௨௪)

பெண்கள் சாயாத கொங்கைகள் கச்சை விரும்பும். ஞானிகள் துக்கத்தை வரவொட்டாமற் கெடுக்கும்.

தண்டருதே னக்காவுந் தம்மோடீ தக்கவரும்
வண்டருக் கூட்டுமுரு மாமலையே—பண்டமர
ரஞ்சமர ணங்கழித்தா ரன்புறுசே யவ்வானோ
ரெஞ்சமர ணங்கழித்தா ரில். (௨௫)

சோலைகள் குளிர்ச்சியைத்தருகின்றபூந்தேனை வண்டுகளுக்கு ஊட்டும் கொடுக்கின்ற மேலோர் வளந்தங்கிய கற்பகத்தைத்தம்முடனே சேர்த்துக்கொள்ளும்.

ஆய பயன்வழிப்போ வார்க்குமின்னு ராடவர்க்கும்
வாயசந் தேற்றுமுரு மாமலையே—சேயைத்
தருவைபத்தை யாக்கொண்டார் தண்மலரோன் ருயாக்
திருவைபத்தை யாக்கொண்டார் சேர்வு. (௨௬)

வழிச்செல்வார்க்கு உண்டாயபிரயோசனத்தைக்காகங்கள் (சகுனத்தால்) தெளிவிக்கும். பெண்கள் (பிரிந்த) ஆடவர்களுக்குப் பொருந்திய தூது மேலு மேலும் விடுக்கும்.

சாரூர் மலர்க்காவுந் தங்கிழலைத் தந்திகளு
மாரூ மதிக்குமுரு மாமலையே—யாரூரர்
தத்துவத்து வாயினர் தங்கச்சார் வாவடிவேற்
சித்துவத்து வாயினர் சேர்வு. (௨௭)

தேனிறைந்த பூக்களையுடைய சோலைகளிடத்து மேகங்கள் (வந்து) தாமதித்திருக்கும். யானைகள் தமது நிழலைத் தம் பகையாக மதிக்கும்.

சொற்கடங்கா யானைதெருத் தோறும்பூஞ் சோலைதொறு
மற்கடங்க ளாவுமுரு மாமலையே—பற்க
ளொருங்கற் றவருணர்வா னேருடன்போற் றோர்சேய்
வருங்கற் றவருணர்வான் வாழ்வு. (௨௮)

(பாகன்) சொல்லுக்கடங்காத யானைகள் வீதிதோறும் வளர்ந்தங்கியமத
ங்களைச் செலுத்தும். பூக்கள் நிறைந்த சோலைதோறும் குரங்குகள் தாவித்
திரியும்.

வில்லினையு நன்னுதலார் மென்முலையு மெல்லிடையும்
வல்லியை வேயுமுரு மாமலையே—நல்லியல்சே
ரஞ்சத்தி யங்கையனுர்க் கன்றுசிறை மீட்டருளு
மஞ்சத்தி யுங்கையனு ரார்வு. (உஎ)

வில்லை நிகர்க்கும் நல்லநெற்றியையுடையார் மெல்லிய கொங்கைகள்
சூதாடுகருவியின் சமானத்தைப் பொருந்தும். (அப்பெண்களின்) இலேசான
இடை வல்லிக்கொடியை யலங்கரிக்கும்.

கையம் புயமின்னுர் கண்ணுமன்னர் கற்புயமும்
வையம் பரிக்குமுரு மாமலையே—வெய்யபன்றிக்
கோடலங்கா ரத்தரிப்பார் கொண்டாடுங் கோமகமிரன்
பாடலங்கா ரத்தரிப்பார் பற்று. (உஅ)

தாமரை மலர்போலுங் கைகளையுடைய பெண்கள் நேத்திரம் கூரிய
பாணங்களைக் கெடுக்கும். அரசர் மலைபோன்ற புயங்கள் உலகத்தைத்தா
ங்கும்.

காதலிற்கற் றோகையினைக் காதலருங் காரகமு
மாதுருக்கங் காக்குமுரு மாமலையே—தீதறுக்கு
மாறக் கரத்தா ரகப்பொருளார் சூரரைவென்
றுறக் கரத்தா ரகம். (உகூ)

மைந்தர்கள் ஆசையுடன் படித்து மகிழ்ச்சியைத் தாய்க்கு அங்கு உண்
டாக்கும். கரிய அகழ்க்கிடங்கு பெரிய கோட்டைகளைச்காவல்செய்யும்.

கன்னலொடு வானேங்கு காவுங் கமழினரு
மன்னணைய டுக்குமுரு மாமலையே—முன்னமே
தந்தைதா யாண்டான் டதுபோற் றமிழ்மதுரை
வந்ததா யாண்டான் மனை. (௩௦)

கரும்புகளுடன் ஆகாயத்தில் வளருஞ்சோலைகள் உத்திரட்டாதி நக்ஷ
த்திரத்தைச் சமீபிக்கும். மணக்கின்ற பூங்கொத்துகள் நிலைபெற்ற அரும்பு
களை வரிசைப்படுத்தும்.

ஓதுமவா வற்றோ ருளமும்துற் றோருளமு
மாதுறவி யக்குமுரு மாமலையே—காதுகின்ற
சூர்த்தடுத்துத் தந்தாராய்ச் சூழ்சுரர்க்குத் தொல்பதிகள்
பார்த்தடுத்துத் தந்தார் பதி. (கூக)

சொல்லும் ஆசையற்ற ஞானிகள் (தங்கள்) இருதயத்தைப் பெருமைதங்கிய துறவிலே செலுத்தும். அவ்வாசைபொருந்திய ஏனையவர் இருதயம் பெண்கள் (வந்து) பொருந்த மகிழ்ச்சியடையும்.

ஒவ்வாமின் னார்கண்ணு மூசல்போ லொண்பொழிலும்
வௌவாவங் காட்டுமுரு மாமலையே—நவ்வாதி
யஞ்செழுத்தோ டாங்குவா னார்துதிக்கு மாறிரண்டு
மஞ்செழுத்தோ டாங்குவான் வாழ்வு. (கூஉ)

சமானமில்லாத பெண்களுடைய கண்கள் வசப்படுத்துகின்ற விடத்தைக் காண்பிக்கும். ஒளிபொருந்திய சோலைகள் ஊசலைப்போல வௌவாற்பறவைகளை யவ்விடத்து அசைக்கும்.

ஈகையுளா ரீயுங்கா லீவார் புகழ்சொலுங்கால்
மாகதரு மெய்க்குமுரு மாமலையே—யேகனு
யாறுதலை யுற்றூர்க் கருளா னசுரர்பொருட்
டீறுதலை யுற்று ரகம். (கூ௩)

கொடையாளிகள் கொடுக்கும்போது ஆகாயத்திலுள்ள (பஞ்ச) தருக்களும் (அவரைப்) புகழும். அக்கொடையாளிகளுடைய புகழை யெடுத்துச் சொல்லும்போது புகழ்ந்து பாடுகின்ற வல்லவரும் (சொல்லமுடியாமல்) இளைக்கும்.

சங்க மொடுவரம்பிற் றக்கோர் தமதிலிற்கூர்
மங்கலந் தேறுமுரு மாமலையே—கொங்கைக்
குடதுவசத் தார்வள்ளி கூடுபயங் கொள்குக்
குடத்து வசத்தார் குடி. (கூ௪)

(வயல்) வரப்புகளிற் சங்கங்களுடனே ஆமைகள் ஒன்றுசேர்ந்து ஏறித்திரியும். தக்கவர் தங்களுடைய இருக்கையிலே மிக்க சுபகாரியங்களை ஆராயும்.

# புத்தகக்குறிப்பு

இராஜாம்பாள்:—இஃதோரரிய தமிழ்க்கதை. ஸ்ரீமாந் ஜே. ஆர். ரங்கராஜா அவர்களா லெழுதப்பெற்றது. இதனுள் ஸ்திரீ புருஷ சம்பாஷணை மிக வியப்பை விளக்கும். சோதிடர்கள் செய்யும் சாகசங்களும் போலீஸ் அநியாயங்களும் மிகப்பாராட்டற்பாலன. மற்றுங் கதைப் போக்கு இனிமை விளைப்பனவே. நல்ல கடிதத்தில் பளபளப்பாக அச்சிட்டு அழகுறப் பயிண்டு செய்யப்பெற்று 184 பக்கங்கொண்ட புத்தக ரூபமாக 12 அணு விலைக்கு வெளியிட்டுளது. இத்தகைய புத்தகங்கள் பலவும் வேண்டற்பாலனவே ஆயினும் ரகர ளகர வித்தியாசமின்றியும் எழுவாய் பயனிலை முடிவுகள் பிழைபடாமலும் சொற்சோர்வின்றிச் செவ்விது ஆராய்ந்து பதிப்பிட்டு வெளியிட்டால் மிகப் பேருபகாரமாகும். தற்காலத்து ஆங்கிலங்கற்று அறிவுபெற்ற பலர் தமிழ்க்கதைக ளெழுதப் புகுந்து எழுவாய் பயனிலை யறியாமலும் வார்த்தைகளின் தன்மைதெரியாமலும் மனம்போனபடியெல்லாம் எழுதி மாணுக்கர்கள் மதியை மருட்டிவிடுகின்றார்கள். இக்கொடுமை மிக மலிந்துவிட்டமையானே இங்கு இத்துணை யெழுத நேரிட்டது. இப்புத்தகத்தை எமது பார்வைக்கனுப்பிய நூலாசிரியர் அவர்கட்கு நன்றி கூறுகின்றோம்.

பரிமளா:—இப்பெயர்கொண்ட கதைப்புஸ்தகமொன்று எமது பார்வைக்கு வந்தது. இது T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியாரவர்களால் மொழிபெயர்த்தெழுதப்பெற்றுத்திரிசிரபுரம் பிரஜாநுகூலன் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ S .G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் அவசியமான சீர்திருத்தங்களுடன் அச்சியற்றப்பெற்றது, இந்நூலும் ஓர் கட்டுக்கதையேயாயினும் இடையிடையே தேசாபிமான வளர்ச்சிக்கு ஏதுவான விஷயங்களும் பாடல்களும் வெகு அழகாகச் சேர்க்கப்பட்டிருத்தலால் எம் நாட்டுச்சிறுவர் சிறுமிகட்கு மிகவும் உபயோகமானதென்றே கூறலாம். கதையும் வாசகப்போக்கும இனிமையாகவேயிருக்கின்றன. உயர்ந்த கடிதப்பதிப்பு அணு 10 சாதாரணக்கடிதப்பதிப்பு அணு 8 இந்நூலையனுப்பிய நாயுடு அவர்கட்கு நன்றி கூறுகின்றோம்.

பத்திராதிபர்

சுதேசிய ஏலக்கிருஷிக் கம்பெனி:—இப்பெயர்கொண்ட சங்கம் ஒன்று மதுரை ஜில்லா கோம்பை நகரத்தில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளது. இக்கம்பெனியின் நோக்கம் அவ்வூர்க்குச் சமீபத்துள்ள திருவனந்தபுரம் சமஸ்தான எல்லையில் தற்காஸ்துமூலம் நிலங்களைபெற்று ஏலப்பயிர்செய்து பலனடையவேண்டுமென்பதேயாம். இதைப் பற்றிய அறிக்கைப் பத்திரமொன்று நமது பாதவுடன் சேர்த்தனுப்பப் பெற்றிருப்பதால் முழு விவரமும் நம் நேயர்கள றிந்துகொள்வார்கள். அறிக்கையில் கண்டபடி பங்கு 1-க்கு 25 ரூபா கொடுத்தால் 5-வது வருடமுதல பிரதி வருடமும் (பங்கு 1-க்கு) 20 ரூபா லாபம் வரக்கூடும். இக்கம்பெனியார் 2000 பங்கு ஏற்படுத்தியதை 4000 நாலாயிரம் பங்குகளாக்கி ஒருலட்சரூபா மூலதனமாகஏற்படுத்தியிருக்கிறார்கள். சுதேசிய வளர்ச்சிக்கு இதுவுமொரு நற்காரியமென்றே கூறலாம். சொற்பத்தொகை பெற்றுச் சமீபத்தில் பெருந்தொகை கொடுப்பதாகச்சொல்லி ஏமாற்றிவரும் மரணப்பண்டு, கலியாணப்பண்டுகளில் பணத்தைப்போட்டு ஏமாந்துபோகும் நம்மவர்கள் கண்விழித்து இப்படிப்பட்ட தேசநன்மைக்கேற்ற காரியங்களில் பிரவேசித்துப பங்குபெற்றால்தான் முன்னுக்குவரலாம். இக்கம்பெனியின் அக்கிராசனாதிபதியான ஸ்ரீமத் உ. ம. சே. தபக்கல் சாய்பு ராவுத்தரவர்களையும் மற்றும் இக்கம்பெனி அங்கத்தவர்கள் பலரையும் நாம் நேரிலறிவோம். இவர்கள் உண்மையான தேசாபிமானிகள். வியாபாரமுறையில் மிகத் தேர்ந்தவர்கள். பொதுஜனக்ஷேமத்தையே நினைப்பவர்கள். வேறு பலதுறை வர்த்தகங்களை நன்கு செய்து மதிககப்பெற்றவர்கள். இவர்களில் எமதின்னுயிர் நண்பர் ஸ்ரீமத உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தரவர்க ளிவ்விஷயத்தில் மிகவும் பாடுபடுகிறார்கள். சுதேசாபிமானசசெல்வர்கள் ஒவ்வொருவரும் இக்கமபெனியில் பஙகுபெற்றுப் புகழும் பொருளுமெய்தி வாழ்வார்களாக. இவ்விஷயமாக மற்றும் விவரம் தெரியவேண்டியவர்கள் மேற்குறிபபிட்ட இருவரி லொருவர்க்கெழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பத்திராதிபர்.